# சிவபூமி

## என் உள்ளத்தில் உதித்த கானங்கள்

பகுதி - I



**என்.கே.எஸ்.திருச்செல்வம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபூமி

## என் உள்ளத்தில் உதித்த கானங்கள்

## பகுதி-1

என்.கே.எஸ்.திருச்செல்வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபூமி

## என் உள்ளத்தில் உதித்த கானங்கள்

## பகுதி-1

**என்.கே.எஸ்.திருச்செல்வம்** B.A

வரலாற்றுத்துறை, சென்னை பல்கலைக்கழகம்

வெளியீடு

**அருந்ததி பதிப்பகம்**

கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிவபூமி**
**என் உள்ளத்தில் உதித்த கானங்கள்-பகுதி 1**
ஆசிரியர்: என்.கே.எஸ்.திருச்செல்வம்

உரிமை: என்.கே.எஸ்.திருச்செல்வம் ©
வெளியீடு: அருந்ததி பதிப்பகம்
68/14, ஸ்ரீ சித்தார்த்த வீதி,
கொழும்பு-05
1ஆம் பதிப்பு: மார்கழி 2021
பக்கங்கள்: xii+88 = 100
அச்சுப் பதிப்பு: குமரன் அச்சகம்
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-06
தொலைபேசி.இல.011-2364550

**Sivabumi**
**En Ullaththil Uthiththa Gaanangal-Part 1**
Author: N.K.S.Thiruchelvam

Copyright: N.K.S.Thiruchelvam ©
Publisher: Arunthathy Pathippakam
68/14, Sri Siddhartha Road,
Colombo-05
1st Edition : December 2021
Pages: xii+88 = 100
Printed by: Kumaran Printers
39, 36th Lane, Colombo-06
Tel. 011-2364550

**ISBN NO: 978-955-3726-10-0**
**Price.Rs: 350.00**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சமர்ப்பணம்

ஒரு கிறிஸ்தவராகப் பிறந்து எனது ஒன்று விட்ட சகோதரியை திரு மணம் செய்தபின், ஓர் இந்துவாக வாழ்ந்து, பல பிள்ளைச் செல்வங் களைப் பெற்று, அவர்களை நல்ல இந்து மைந்தர்களாக வளர்த்து, **எனக்கு சுயமாக பாடல்களை பாடவும், எழுதவும் ஆர்வமூட்டி,** கோயிலின் நிர்வாக சபை உறுப்பினராக, செயலாளராக, தலைவராக பல பொறுப்புக்களை வகித்து, தன் வாழ்நாள் முழுவதும் ஓர் சிறந்த மனிதராக வாழ்ந்து, இறைவனடி சேர்ந்த **எனது அன்பு மாமா**

**அமரர் ஏ.கே.கே.பவுல்**

**அவர்களுக்கும்**





எனது ஒன்றுவிட்ட அண்ணனாகப் பிறந்து, **இசையிலும், பாடல்களி லும் எனக்கு சிறுவயது முதல் ஆர்வமூட்டி, பாடல்களை தாளம், சுருதி தப்பாமல் பாட எனக்கு கற்றுத்தந்து,** தபேலா மற்றும் போங்கோஸ் வித்துவானாக பிரபல்யம் பெற்று, பலருக்கு அந்த இசைக் கருவிகளை வாசிக்கக் கற்றுக் கொடுத்து, இறைவனடி சேர்ந்த

**எனது அன்பு அண்ணா**

**அமரர் ஆறுமுகம் சண்முகவேலன்**

**அவர்களுக்கும்**

இந்நூலை **சமர்ப்பணம்** செய்கிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது நெஞ்சம் நிறைந்த நன்றிகள்

இந்நூல் வெளிவர

தமது மேலான பங்களிப்பை வழங்கிய

**அம்பாறையைச் சேர்ந்த தம்பி**

**திரு.பவுல் தேவதாஸ்**

அவர்களுக்கும்,

**கொழும்பைச் சேர்ந்த அன்பு நண்பர்**

**திரு.தங்கவேலு யோகராஜ்**

அவர்களுக்கும்

**எனது நெஞ்சம் நிறைந்த நன்றிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியர் எழுதிய நூல்கள்

1. தென்னிலங்கையின் புராதன இந்துக் கோயில்கள்
2. பாரம்பரியமிக்க கதிர்காம பாதயாத்திரையும், கந்தசுவாமிக் கடவுளின் புனித பூமியும்
3. கதிர்காமத்தை தரிசித்த சித்தர்களும், முனிவர்களும்
4. தென்கிழக்கு இலங்கையின் பண்டைய இந்து சமய வரலாறு
5. இலங்கையில் இராவணன் தொடர்பான பிராமிக் கல்வெட்டுக்கள்
6. இந்து சமயம் ஓர் அறிவியல் பொக்கிஷம்
7. புதையுண்டுபோன புராதன இந்துக் கோயில்கள்
8. யார் இந்த இராவணன்?
9. போர்த்துக்கேயர் அழித்த பெந்தோட்டை காளி கோயில்
10. தென்னிலங்கை பிராமிக் கல்வெட்டுகளில் இந்து சமயமும், தமிழும்
11. முன்னேஸ்வரம்-தொன்மையும் வரலாறும்
12. கன்னியா-பண்டைய சைவத் தமிழரின் பாரம்பரிய அடையாளம்
13. கந்தன் கவசங்கள்
14. பண்டைய தமிழ் நூல்களில் சிவன்
15. கபிலித்தை கந்தசுவாமிக் கோயில்-வரலாறும், மரபுகளும்
16. சிவபூமி-என் உள்ளத்தில் உதித்த கானங்கள்-பகுதி 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கம்பவாரிதி இ. ஜெயராஜ் அவர்களின்
# முன்னுரை

உலகம் என்பதே தமிழ்தம் சிந்தனை விரிவின் எல்லையாம். அதனால்தான் "உலகம் உவப்ப" என சங்கத் தலைமைப்புலவர் நக்கீரரும், "உலகம் யாவையும்" என கவிச்சக்கரவர்த்தி கம்பரும், "உலகெலாம்" என தெய்வச் சேக்கிழாரும், உலகிற்கு முதன்மை கொடுத்து பாடத் தலைப்பட்டனர். இங்கனமாய் உலகம் தழுவிய நம் தமிழ் மொழி இயல், இசை, நாடகம் என்ன மூன்று கூறுகளாய்ப் பிரிந்து விரிந்து கிடக்கிறது. இம்முக்கூறுகளுள் இயல் என்பது மொழியின் இயற்கை நிலை. இவ்வியலுக்கு இராகம் சேர்க்க இசைத் தமிழும், பாவம் சேர்க்க நாடகத் தமிழும் உருவாகுமாம். இங்கனமாய் ஒரு மொழியின் விரிவுகள் அனைத்தையும் உள்ளடக்கி நிற்பது, நம் தமிழ் மொழியின் தனிச்சிறப்பு.

தமிழ்ப் புலவோர் ஒரு சிலருக்கே, தமிழின் வேறுபட்ட இக் கூறு களுள் இயல்பாற்றல் வாய்க்கும். அங்ஙனம் தமிழின் இம்முக்கூறுக ளுள் இயல், இசை எனும் இரு கூறுகளில் ஆற்றல் பெற்று, அதனை நிரூபித்து நிற்கிறார் நண்பர் திரு.என்.கே.எஸ் திருச்செல்வம் அவர்கள். பல்கலைக்கழகத்திற்கு வெளியே இருந்தபடி, இவர் செய்யும் வரலாற்று ஆராய்ச்சிகள் பலரையும் வியப்பில் ஆழ்த்துவன. நீண்ட முயற்சிகள் செய்து அவர் தேடி வெளியிட்டிருக்கும் ஆய்வு முடிவுகள், இம்மண் ணில் தமிழ்தம் தொன்மையைத் தெளிவாய் நிரூபித்து நிற்கின்றன. வர லாற்றாய்வு தான் இவரது அறிவுப்புலம் என்று நினைத்திருந்த என்னை, தனது இசைப் பாடல்கள் மூலம் ஈர்த்து, தான் ஓர் இசைப் புலமையாளன் என்பதையும் நிரூபித்திருக்கிறார் இவர்.

இசையை இவர் முறை சார்ந்து கற்காவிட்டாலும் இசை மீதிருந்த தனது ஆர்வத்தால் மிகச்சிறுவயது முதலே, இசைப் பாடல்கள் இயற்ற முயன்று அதில் வெற்றியும் கண்டிருக்கிறார் நண்பர் திருச்செல்வம் அவர்கள். பக்திப் பாடல்களில் தொடங்கிய இவரது இசைப் பாடல் முயற்சிகள், சபரிமலை யாத்திரையில் ஐயப்ப பாடல்களாய் விரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் வெற்றி கண்டன. பின்னாளில் ஏலவே வெளிவந்திருக்கும் லிங்காஷ்டகப் பாடல்களில் மனம் பதித்த நண்பர் திருச்செல்வம் அவர்கள், அதுபோல ஈழத்து லிங்காஷ்டகப் பாடல்களை இயற்ற வேண்டும் என விரும்பி, 180 வரிகளில் அப்பாடலை இயற்றி தன் எண்ணத்தை சாதித்துள்ளார்.

தனது வரலாற்று ஆய்வுத் தேடல்களில் பல சிவன் கோயில்களை இனங்கண்டு வெளிப்படுத்திய இவர், தனது ஈழத்து லிங்காஷ்டகப் பாடல்களில், அவ்வாலயங்களைப் பதிவு செய்துள்ளமை புதுமையான ஒரு முயற்சியாகும். இசைப்பாடல்களாகவும் அதேநேரத்தில் வரலாற்றுப் பதிவுகளாகவும் அமைந்திருக்கக்கூடிய, ஈழத்து லிங்காஷ்டக முயற்சி பாராட்டுக்குரிய ஒரு புதிய முயற்சியாம்.

கேதீஸ்வரம், கோணேஸ்வரம், நகுலேஸ்வரம் எனப் பல சிவன் ஆலயங்கள் மீதும், முருகன் ஆலயங்கள் மீதும் இவர் பாடியுள்ள இசைப் பாடல்கள் இசையால் உயர்ச்சி பெறத்தக்கன. ஏலவே தன் சொந்த முயற்சியால் 15 நூல்களை வெளியிட்டுள்ள திரு.திருச்செல்வம் அவர்கள் தற்போது பதினாறாவது நூலாக, இவ் இசைப்பாடல்கள் நூலினை வெளியிடுவது பாராட்டத் தகுந்த விடயமாகும். இவர்தம் ஆய்வு முயற்சிகளைப் பாராட்டி எமது கம்பன் கழகம், பேரறிஞர், அமரர் பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் அவர்கள் குடும்பத்தார் நிறுவிய "நுழைபுல ஆய்வு" விருதினை வழங்கி கௌரவித்தமையும் இங்கே குறிப்பிடத்தக்கது. சைவமும், தமிழும் வேறுவேறானவை அல்ல என்பது, நம் மரபு சார்ந்தோர் தம் உறுதியான கருத்தாகும். அதனால் தானோ என்னவோ தன் ஆய்வு முயற்சிகளிலும், இசைப்பாடல் முயற்சிகளிலும் சமயம் சார்ந்த விடயங்களுக்கு நண்பர் திருச்செல்வம் அவர்கள் முக்கியத்துவம் கொடுத்து வருகிறார். அவர்தம் தனித்துவமான முயற்சிகள் மென்மேலும் உயர, எனை வாழ்விக்கும் கவிச்சக்கரவர்த்தி கம்பனாட்டாழ்வான் திருவடி பணிந்து வாழ்த்துகிறேன்.

'இன்பமே எந்நாளும் துன்பமில்லை'

**கம்பவாரிதி இ. ஜெயராஜ்**
கம்பன் கழகம், கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்

**அறிமுகம்** ........................ **1**

**சிவன் பாடல்கள்** ........................ **4**

ஈழத்து லிங்காஷ்டகம் ........................ 4

சைவமும் செந்தமிழும் எங்கள் இரண்டு கண்களே ........................ 13

சிவ சிவ சிவ சிவ ஈஸ்வரா பரமேஸ்வரா ........................ 16

மலை மலை கோணமாமலை ........................ 20

கேதீஸ்வரா திருக்கேதீஸ்வரா ........................ 23

சிவ சிவ ஈசனே முன் ஈஸ்வரனே சிவனே ........................ 26

ஓம்நமோஓம் ஓம்நமோஓம் நகுல ஈஸ்வரா ஓம்ஓம் ........................ 28

தொண்டேஸ்வரா தென் ஈஸ்வரா ........................ 31

**முருகன் பாடல்கள்** ........................ **34**

அந்தக் கந்தனின் நாமம் ........................ 34

முருகா முருகா முருகா சரணம் ........................ 38

**விஷ்ணு பாடல்கள்** ........................ **39**

ஸ்ரீனிவாசா கோவிந்தா ........................ 39

நமோ நமோ நாராயணா ........................ 41

திருப்பதியில் வாழ்பவனே ........................ 42

**அனுமன் பாடல்** ........................ **43**

ஜெய ஹனுமான் ஜெய ஹனுமான் ........................ 43

**ஐயப்பன் பாடல்கள்** ........................ **44**

அப்பனின் மலையோ கயிலைமலை ........................ 44

சபரிமலை ஐயனும் நீயே ........................ 46

புஷ்பாஞ்சலி மலர்ப் பூ அஞ்சலி ........................ 48



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை போட்டுட்டா திருந்தியாகணும் ........ 50
ஐயனை அன்போடு தாலாட்டுவோம் ........ 52
பம்பை நதிக் கரையினிலே சரணம் ஐயப்பா ........ 54
**கருப்பண்ணசாமி பாடல்கள் ........ 57**
கன்னங் கருத்தவரு காவலுக்கு வல்லவரு ........ 57
வாராரு வாராரு கருப்புசாமி வாராரு ........ 59
அழகர்மலை காவல்காரன் ........ 62
கருப்பு கருப்பு கருப்பரு ........ 63
அண்ட பகிரண்டமும் ........ 64
**தத்துவப் பாடல் ........ 66**
நம்பிக்கை தானே எங்கள் பலம் ........ 66
**தாலாட்டுப் பாடல் ........ 69**
தங்கப் பொன்னே எங்கள் கண்மணி ........ 69
**அம்மன் பாடல்கள் ........ 72**
வாழும் எங்களுக்கு வழிகாட்டி ........ 72
தாயே தெய்வம் அறிவேனம்மா ........ 74
**இந்து எழுச்சிப் பாடல்கள் ........ 75**
உலகின் புதுமை இந்துமதம் ........ 75
சங்கத்தின் தோழர்களே ........ 78
ஒன்று பட்ட எங்கள் சக்தியே ........ 80
வா நண்பா நண்பா வந்திணைந்திடு ........ 82
சங்கம் தானே எங்கள் மூச்சு ........ 84
இந்து எழுந்திடு இன்றே எழுந்திடு ........ 86
வாருங்க ஷாக்காவுக்கு வாருங்க ........ 87



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகம்

எனக்கு பத்து வயது எட்டிய காலத்தில் திரை இசைப் பாடல்கள் மீது ஓர் விபரிக்க முடியாத ஆசை ஏற்பட்டது. அன்று 1971 ஆம் ஆண்டு பாடல்களைக் கேட்டு மகிழ்வதற்கு இருந்த ஒரே ஒரு சாதனம் வானொலி மட்டுமே. அதிலும் தமிழ்ப் பாடல்களைக் கேட்க "இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்-தமிழ்ச் சேவை-2" எனும் வானொலி மட்டுமே இலங்கையில் இருந்தது.

திரு. எஸ்.பி.பாலசுப்ரமணியம் அவர்கள் தமிழ்த் திரை இசைத் துறையில் அறிமுகமான காலம் அது. அவருடைய பாடல்களைக் கேட்பதிலும், பாடுவதிலும் அலாதிப் பிரியமும் இருந்தது. அந்தக் கால கட்டத்தில் பாட்டுப் புத்தகங்கள் மூலமாகவே பாடல் வரிகளைத் தெரிந்து கொள்ளலாம். எஸ்.பி.பி. அவர்களின் புதிய பாடல்கள் பல வெளிவந்து வானொலியில் ஒலித்துக் கொண்டிருந்தன. ஆனால் அப்பாடல்களைப் பாடுவதற்கு வரிகள் தெரியவில்லை. பாடல் புத்தகங்கள் அச்சிடப்பட்டு கொழும்பில் இருந்து எங்கள் ஊருக்கு வருவதற்கு சில காலம் செல்லும்.

இந்நிலையில் தினமும் வெளிவரும் புதிய பாடல்களை எப்படிப் பாடுவது? ஆர்வம் மேலிட ஓர் யுக்தியைக் கையாண்டேன். பாடல்கள் வானொலியில் ஒலிக்கும்போதே அவற்றைக் கேட்டு பாடல் வரிகளை எழுதுவது தான் அந்த யுக்தி. ஆரம்பத்தில் நான்கு, ஐந்து தடவைகள் ஒரு பாடலைக் கேட்டு எழுதினால் தான் அப்பாடல் வரிகளை முழுமையாக எழுதி முடிப்பேன். இதனால் காலப்போக்கில் மிகவும் வேகமாக எழுதப் பழகிக் கொண்டேன். பின்பு இரண்டு தடவைகள் கேட்டால் போதும், பாடல் வரிகள் முழுமையடைந்து விடும்.

தமிழ்ச் சேவை-2 ல் பொங்கும் பூம்புனல், புதுவெள்ளம், அன்றும் இன்றும், இசைக் களஞ்சியம் போன்ற நிகழ்ச்சிகளில் புதிய பாடல்கள் ஒலிபரப்பாகும். இந்நிகழ்ச்சிகளை விரும்பிக் கேட்பதுண்டு. பாடசாலைக்குச் சென்று வந்தபின் புதிய பாடல்கள் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளைத் தவற விடுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டுப் புத்தகம் வெளிவரும் முன்பே பாடல்களை முழுமையாக எழுதி அவற்றைப் பாடும் திறமையும் அன்று எனக்கிருந்தது. அந்தக் கால கட்டத்தில் எங்கள் ஊரில் "உதயன்" என் பெயரில் ஓர் இசைக் குழு இருந்தது. ஊரில் உள்ள இளைஞர்கள் அந்த இசைக்குழுவை நடத்திக் கொண்டிருந்தனர்.

எனக்கு அப்போது 12 வயதிருக்கும். அன்றைய கால கட்டத்தில் வெளிவந்த புதிய பாடல்களை உடனே பாடக் கூடிய ஒரு சிறுவனாக நான் இருந்தபடியால் அந்த இசைக்குழுவில் இருந்த மாமாமார் மற்றும் அண்ணன்மார் என்னையும் அக்குழுவில் இணைத்துக் கொண்டு அவர்கள் செல்லும் இடங்களுக்கு என்னையும் அழைத்துச் சென்று பாட வைப்பர். கோயில் திருவிழாக்கள், திருமண வைபவங்கள் ஆகிய வற்றில் பாடும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது.

இப்படியாக ஆரம்பித்த எனது இசை ஆர்வம் காலப்போக்கில் பாடல்களை எழுதும் ஆர்வத்தையும் உண்டாக்கியது. அந்தக் கால கட்டத்தில் வெளிவந்த பிரபல்யமான ஹிந்திப் பாடல்களை அதே மெட்டில் தமிழ் வரிகளில் இயற்றிப் பாடுவது ஒரு பொழுது போக்காக இருந்தது. ஆராதனா, கீத், அப்னாதேஷ், ஏக்பூல் தோமாலி ஆகிய ஹிந்தித் திரைப்படங்களில் இடம்பெற்ற பிரசித்தி பெற்ற பாடல்களை இவ்வாறு தமிழில் இயற்றிப் பாடினேன். இப்படி மெட்டுக்குப் பாட் டெழுதும் பழக்கம் சிறு வயதிலேயே ஏற்பட்டது.

பின்பு பல வருடங்களின் பின் 2001 ஆம் ஆண்டு சபரிமலைக்கு மாலை போட்டு விரதம் இருந்த சமயத்தில் ஐயப்பன் மற்றும் காவல் தெய்வம் கருப்பண்ணசாமி ஆகிய தெய்வங்களுக்கு மெட்டமைத்து சில பாடல்களை எழுதி பஜனைகளில் பாடினேன். அப்பாடல்கள் சுவாமி மார்கள் மத்தியில் பிரபல்யம் ஆகின. இதனால் மேலும் சில பாடல்களை இயற்றிப் பாடினேன். இவ்வாறு மெட்டமைத்து பாட்டெழுதும் திறன் மேலும் வளர்ந்தது.

2006 ஆம் ஆண்டு முதல் இந்து சமய அமைப்புகளில் இணைந்து சமயப் பணிகள் செய்யத் தொடங்கினேன். 2010 ஆண்டு இந்து சேவா சங்கம் எனும் அமைப்பில் இணைந்து பல சேவைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிகளை செய்து வந்தேன். இந்த அமைப்பில் தினமும் இந்து எழுச்சிப் பாடல்களைப் பாடுவோம். இப்பாடல்கள் எல்லாமே தமிழகத்தில் இயற்றப்பட்ட பாடல்கள். அப்போது தான் இலங்கையிலும் இப்படிப்பட்ட பாடல்களை எழுதிப் பாடினால் சிறப்பாக இருக்கும் என எண்ணினேன். அதன் பின்பு சில இந்துசமய எழுச்சிப் பாடல்களை மெட்டமைத்து எழுதிப் பாடினேன். அவை இந்துக்கள் மத்தியில் பிரசித்தி பெற்றன.

சில வருடங்களுக்கு முன்பு இந்தியாவில் "லிங்காஷ்டகம்" எனும் சிவனின் லிங்கப் பாடல்கள் சமஸ்கிருதம், தமிழ் ஆகிய மொழிகளில் வெளிவந்து மக்கள் மத்தியில் பிரசித்தி பெற்றன. தெய்வீகம் மிக்க இப்பாடல்களை தினம் தினம் கேட்கும்போது இது போன்று லிங்கங்களை மையமாக வைத்து "ஈழத்து லிங்காஷ்டகப் பாடல்" ஒன்றை இயற்ற வேண்டும் எனும் எண்ணம் தோன்றியது. இவ் எண்ணத்தின் விளைவாக கடந்த 24 வருடங்களாக நான் மேற்கொண்ட வரலாற்று ஆய்வுகளின் மூலம் இலங்கையில் கண்டறிந்த லிங்கங்களின் பெயர்களை வைத்து 180 வரிகளில் "ஈழத்து லிங்காஷ்டகம்" எனும் பாடலை இயற்றினேன்.

அதன் பின்பு இலங்கையின் பஞ்ச ஈஸ்வரக் கோயில்களின் வரலாறு மற்றும் பெருமைகளைக் கூறும் பாடல்களையும் இயற்றினேன். இவ்வாறு நான் இயற்றிய பாடல்களை அவை உருவான விதம் பற்றிய விளக்கத்துடன் இங்கே ஒரு நூலாக உருவாக்கியுள்ளேன். இந்நூலில் மொத்தமாக நான் எழுதிய 34 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

நான் சுயமாக பாடல்களை பாடவும், எழுதவும் எனக்கு ஆர்வமூட்டிய எனது அன்பு மாமா அமரர் ஏ.கே.கே. பவுல் அவர்கள் எழுதி என்னிடம் கொடுத்த இரண்டு பாடல்களையும் அவரின் நினைவாக இந்நூலில் பதிவு செய்துள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவன் பாடல்கள்

## ஈழத்து லிங்காஷ்டகம்

கடந்த 24 வருடங்களாக இலங்கை முழுவதும் நான் மேற் கொண்ட ஆய்வின் போது ஏராளமான லிங்கக் கோயில்களை ஆய்வு செய்யும் பாக்கியம் கிடைத்தது. இவற்றில் பல அழிந்து போய் மண்ணுள் புதையுண்டு கிடக்கின்றன. இவற்றையெல்லாம் உலகறியச் செய்ய வேண்டும் எனும் எண்ணத்தில் மாவட்ட அடிப்படையில் பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ளேன்.

சில வருடங்களுக்கு முன்பு லிங்கங்கள் பற்றிப் பாடப்பட்ட லிங்காஷ்டகம் எனும் பாடல் இந்துக்கள் மத்தியில் பிரசித்தி பெற்று விளங்கியது. இப்பாடலை பல தடவைகள் கேட்டு ரசித்துள்ளேன். ஒரு நாள் இரவு நித்திரைக்குச் செல்லும் நேரம் அமைதியான சூழ்நிலையில் எஸ்.பி. பாலசுப்ரமணியம் அவர்கள் பாடிய லிங்காஷ்டகம் பாடலை இயர்போனில் மெய்மறந்து கேட்டு ரசித்துக் கொண்டிருந்தேன்.

அப்போது சட்டென்று மனதில் ஒரு எண்ணம் தோன்றியது. இலங்கையிலும் ஏராளமான லிங்கங்கள் உள்ளனவே. இவற்றை வைத்து ஈழத்து லிங்காஷ்டகப் பாடல் ஒன்றை இயற்றினால் அது மக்களுக்கு விரைவில் போய்ச் சேருமல்லவா என எண்ணினேன். அந்த எண்ணம் தோன்றிய போது உருவான பாடல் தான் "ஈழத்து லிங்காஷ்டகம்"

இராவணன் காலம் முதல் இலங்கை மண்ணில் அழிந்து போய் புதைந்து கிடக்கும் 70 லிங்கங்கள் உட்பட 172 பழமை வாய்ந்த லிங்கங்களின் பெயர்களை வைத்து இப்பாடலை இயற்றியுள்ளேன். இதன் தொடர்ச்சியாக "ஈழத்து லிங்காஷ்டகம் மூலமும், விளக்க உரையும்" எனும் நூலை விரைவில் வெளியிட உள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஈழத்து லிங்காஷ்டகம்**

கோணேஸ்வரத்தில் மாதுமை லிங்கம்
கேதீஸ்வரத்தில் கௌரி லிங்கம்
முன்னேஸ்வரத்தில் வடிவு லிங்கம்
நகுலேஸ்வரத்தில் நகுல லிங்கம் 4

சந்திரசேகர ஈஸ்வர லிங்கம்
ஈஸ்வரமுனி எல்லாளனின் லிங்கம்
சிவனொளி பாதத்தில் சுமண லிங்கம்
சிவகிரி காசி அப்பனின் லிங்கம் 8

கதிரமலை கந்த சுவாமியின் லிங்கம்
குதிரைமலை அல்லி ராணியின் லிங்கம்
மானாவரியில் ராம லிங்கம்
மாமங்க ஈஸ்வர மணல் லிங்கம் 12

கொக்கட்டி மரத்தில் தான்தோன்றி லிங்கம்
ஒட்டிசுட்டானில் அநாதி லிங்கம்
ராவணன் தாயின் கன்னி லிங்கம்
ரவிகுல மாணிக்க பதவி லிங்கம் 16

அனுரா புரேச அரச லிங்கம்
புலத்தி நகரில் பத்து லிங்கம்
வானவன் மாதேவி ஈஸ்வர லிங்கம்
வாரிவன நாத வெள்ளை லிங்கம் 20

திருவி ராமேஸ்வர ஆழி லிங்கம்
திருமங்கலை பர மேஸ்வர லிங்கம்
திருக்கரசை பதி ஜீவ லிங்கம்
திருமலை விஸ்வ நாத லிங்கம் 24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூரில் சட்ட நாதரின் லிங்கம்
நயினை சோம ஸ்கந்த லிங்கம்
நாகர்முனை கடல் பிம்ப லிங்கம்
நாக பர்வ மலை காட்டு லிங்கம் 28

உகந்தைமலை உச்சி ராவண லிங்கம்
உலக நாச்சியின் காசி லிங்கம்
சிங்கை ஆரியன் கைலாச லிங்கம்
கங்கை வெளியின் வயலில் லிங்கம் 32

வண்ணை கோயில் வைத்தீஸ்வர லிங்கம்
மண்ணித்தலை முனை மணலில் லிங்கம்
பொன்னம்பல வானேசர் கற்றளி லிங்கம்
தென்னன் மரபடி பாண்டிய லிங்கம் 36

ஆதி அகத்தியர் தாபன லிங்கம்
ஆனைகட்டி மலை பாண லிங்கம்
கண்தளை சதுர்வேதி மங்கல லிங்கம்
களனி மலையில் ஒழித்த லிங்கம் 40

தம்பலகாமம் கோண லிங்கம்
செங்கடன் கண்டியில் நாத லிங்கம்
செம்பி மலையில் தாரா லிங்கம்
சேறுநகர் மணி புரத்து லிங்கம் 44

திரியாய் மலையில் பல்லவ லிங்கம்
அரியாலை கங்கை நதியின் லிங்கம்
அரிட்ட பர்வத மலையின் லிங்கம்
அருகமணப் பூ மனையில் லிங்கம் 48



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூதவராயர் வீதியன் லிங்கம்
பூநகரில் ஆலம் கேணி லிங்கம்
புத்தூர் நடராஜ ராம லிங்கம்
சித்தன் கேணி சிதம்பர லிங்கம் 52

ரத்துமல் பதியில் நந்தி லிங்கம்
ரம்புக்கன் மொட்டை புலியின் லிங்கம்
ராட்சதக் கல் அணை குமுக்கன் லிங்கம்
ராசமலை உச்சி சதுர லிங்கம் 56

வல்வெட்டிதுறை வைத்தீஸ்வர லிங்கம்
வந்தாறுமூலை பொத்தானை லிங்கம்
வவுனிக்குளத்தில் எட்டு பட்டை லிங்கம்
வவ்வாலைக் கேணி சந்திர லிங்கம் 60

அம்பாள் பாறை குளத்து லிங்கம்
அக்கரை பத்தூர் பசுபத லிங்கம்
அனலையில் நாக ஈஸ்வர லிங்கம்
நூரளை லங்கா தீஸ்வர லிங்கம் 64

ருத்ரா புரத்தில் சோழ லிங்கம்
ரம்பைமா நாகுல ராச்சிய லிங்கம்
கொக்குத் தொடுவாய் மகா லிங்கம்
குருந்தூர் சிவனின் கோயில் லிங்கம் 68

களுதாவளையில் சுயம்பு லிங்கம்
கரடியன் ஆற்று குளத்து லிங்கம்
கல்யாணி நகரில் விபீஷண லிங்கம்
காரைக்கால் விஸ்வ நாதரின் லிங்கம் 72



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனன்காமத்தில் பண்டார லிங்கம்
பண்டாரவெளியில் நாக லிங்கம்
பருத்தியூரில் பசுபதி லிங்கம்
பண்டித சோழ ஈஸ்வர லிங்கம் 76

கோட்டை அழகு ஈஸ்வர லிங்கம்
கோயில்குளம் அகில் ஆண்டவர் லிங்கம்
கொத்துமலை உச்சி கொன்றை லிங்கம்
கோட்டை முனீஸ்வர சுவாமி லிங்கம் 80

கப்பித்தா வத்தையில் தீவு லிங்கம்
கலந்தனின் ஊரில் சாஸ்த்திர லிங்கம்
காவலூரில் கணபதி லிங்கம்
காலி மீனாட்சி சுந்தர லிங்கம் 84

வெள்ளை வில்வ பத்திர லிங்கம்
எல்லை பர்வத அருவி லிங்கம்
மாவலி கங்கை சங்கம லிங்கம்
மல்லிகைத்தீவு மங்கள லிங்கம் 88

வேலணை காசி விஸ்வ லிங்கம்
நிகும்பலை நாளந்த யாக லிங்கம்
சீதா வாக்கையில் ராஜ லிங்கம்
சின்னத் தொடுவாய் கேணி லிங்கம் 92

கதிரமலை சிவன் கோயில் லிங்கம்
கந்தர் ஓடை நாத லிங்கம்
குடத்தனை நாகர் கோயில் லிங்கம்
கும்பகர்ணன் மலை உறங்கும் லிங்கம் 96



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கு மலையில் ராவண லிங்கம்
இரத்தின புரியில் மாணிக்க லிங்கம்
இத்தியடி ஆதி சிவனின் லிங்கம்
ஈழத்து சிதம்பர வியாவில் லிங்கம் 100

நஞ்சுண்ட சிவன்நீர் கொழும்பு லிங்கம்
நந்தீஸ்வர முத்து ரஜவெளி லிங்கம்
நாகரின் வெளியில் அசோக லிங்கம்
யாகக்கல் மலையின் குகையில் லிங்கம் 104

செட்டித்தெரு சோம சுந்தர லிங்கம்
மட்டுவில் சந்ர மௌலீஸ்வர லிங்கம்
மாத்தளை பதவி ஈஸ்வர லிங்கம்
மயிலணி குடவாயில் கோட்ட லிங்கம் 108

வட்டுக் கோட்டை விசாலாட்சி லிங்கம்
விசவகிரி மலை விஷ்வ லிங்கம்
வீரகங்கை கரை கோட்டை லிங்கம்
வெடுக்கு நாரி கற்சுனை லிங்கம் 112

வேலாயுதர் வெளி தீவு லிங்கம்
வளத்தாப்பிட்டி கல் மலையில் லிங்கம்
சூரிய பெருந்துறை களப்பு லிங்கம்
இலங்கைத்துறை குன்று சமுத்ர லிங்கம் 116

தண்டேஸ்வரத்தில் புதைந்த லிங்கம்
தங்கத் திருமலை திவக்க லிங்கம்
தலைகுரு மலையில் அகத்திய லிங்கம்
தரவைக் காட்டில் சிதைந்த லிங்கம் 120



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஞ்சைநகர சந்தகிரி லிங்கம்
தென்திசை ராவணன் கோட்டை லிங்கம்
சங்கமன் கண்டி காட்டு லிங்கம்
சம்மன்துறை தரவை கோரக்கர் லிங்கம் 124

கிவுல்கடவை சோலை சோழ லிங்கம்
குடும்பிமலைக் குன்று உருளை லிங்கம்
குயில்வத்தை தான்தோன்றி ஈஸ்வர லிங்கம்
குயின்பெரி நவநாத சித்தரின் லிங்கம் 128

முகத்து வார அருணை லிங்கம்
முரசு மோட்டை சங்கர லிங்கம்
மண்டைதீவு தில் லேஷ்வர லிங்கம்
ஊரை தீவு ராம லிங்கம் 132

அட்டல தீசன் பட்டை லிங்கம்
ஆவரங்கால் சிவன் மூன்று லிங்கம்
எரக்கா விலவில் வீர லிங்கம்
எருவில் சிவனார் மடுவில் லிங்கம் 136

சித்தர் வில்லு தீச லிங்கம்
சித்தர் மலை சிவ நகர லிங்கம்
மணமகா வேரத்து மலையில் லிங்கம்
மாதுறை பதி நக ரீஸ்வர லிங்கம் 140

இரு பாலை நெடுங் கேணி லிங்கம்
நெல்வேலி கோயில் காட்டு லிங்கம்
சங் கானை பதி மகா லிங்கம்
சம்பூர் பதி வைத்தீஸ்வர லிங்கம் 144



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐம்பொழில் பார்வதி புரத்தின் லிங்கம்
உத்தம சோழ ஈஸ்வர லிங்கம்
உத்தமர்தம் கோயில் வலகழி லிங்கம்
உச்சன் கோட்டையில் அக்கினி லிங்கம் 148

மாணிக்க கங்கைக்கரை முத்து லிங்கம்
பரந்தன் வயலில் பட்டை லிங்கம்
தூபம் ராமர் மகேச லிங்கம்
தொப்பி குடுமியில் வேலுடன் லிங்கம் 152

நீலகிரிமலை பிராமண லிங்கம்
நிக்கா குளக்கட்டு சுடுமண் லிங்கம்
நானா தேசிகர் சேதவ லிங்கம்
பாலாவிக் கரம்பை பாண லிங்கம் 156

அர்த்த நாரீச வேராகல் லிங்கம்
அபயகிரி வட்டகாமினி லிங்கம்
பசவ குளத்தின் பண்டைய லிங்கம்
சிவிகாசாலை பண்டு லிங்கம் 160

X வடநகர் விஜயன் ராமர் லிங்கம்
X பங்குளி அசோக ராமர் லிங்கம்
பெருமியன் குளத்தில் இரண்டு லிங்கம்
X பிதுர்மலை தாது சேனனின் லிங்கம் 164

பரமேஸ்வரனின் வெள்ளைக்கல் லிங்கம்
பிராமணயன் காம சிவநந்தி லிங்கம்
கல்லுடைந்த சிவ குளத்து லிங்கம்
சிவாலய கல்லு பாறை லிங்கம் 168


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக்கல் மலைக்குகை முரடு லிங்கம்
புத்தன மலைக்குகை சிதைந்த லிங்கம்
கடையிற்சுவாமி சிதம்பர லிங்கம்
சுதுமலை விஸ்வ விசாலாட்சி லிங்கம் 172

கால் நூற்றாண்டில் கண்கண்ட லிங்கம்
நூல் உருவில் வரும் அஷ்டக லிங்கம்
திருவுக்காணை கொடுத்த லிங்கம்
திரிகூட கிரி மலை கோயில் லிங்கம் 176

சம்பந்தர் போற்றிய கோண லிங்கம்
சுந்தரர் பாடிய மாதோட்ட லிங்கம்
அருண கிரியின் திருப்புகழ் லிங்கம்
இலங்கை முழுவதும் லிங்கம் லிங்கம் 180



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவமும் செந்தமிழும் எங்கள் இரண்டு கண்களே

இலங்கைத் திருநாடு சிவபூமி என பண்டு தொட்டு அழைக்கப்படுகிறது. இங்கு ஏனைய நாடுகளை விட சைவமும், தமிழும் செழிப்புற்று விளங்குகின்றன. இங்குள்ள மக்கள் அவற்றைப் போற்றிப், பாதுகாத்து, வளர்க்கும் பணியை தங்கள் தார்மீக கடமையாக நினைக்கின்றனர்.

சிவனும், முருகப் பெருமானும் கலந்து கொண்டதாகக் கூறப்படும் முதல் தமிழ்ச்சங்கம் அமைந்திருந்த குமரிக் கண்டத்தின் எஞ்சிய நாடாக இலங்கை விளங்குகிறது. இக்குமரி நாட்டிலே தான் முதல் மாந்தனும், முதல் சமயமான சைவமும், தமிழ் எனும் முதல் மொழியும், இனமும், அதன் தொன்மை வாய்ந்த சங்க நூல்களும் தோற்றம் பெற்றன. இவற்றை வளர்க்க இராவணனும், அகத்தியரும் தோற்றம் பெற்றனர். இந்த உன்னத விடயங்களை அதன் தொன்மை வரலாற்றோடு பதிவு செய்ய வேண்டும் என எண்ணிய போது இப்பாடல் உருவானது.

சைவமே .. சிவ சைவமே .. சிவ சைவமே .. சிவமே
சைவமே .. சிவ சைவமே .. சிவ சைவமே .. சிவமே

ஓம் சிவா சிவ ஈஸ்வரா பரமேஸ்வரா சிவமே
ஈழமே சிவபூமியே அதில் வாழ்வதில் சுகமே

சைவமே .. சிவ சைவமே .. சிவ சைவமே .. சிவமே
சைவமே .. சிவ சைவமே .. சிவ சைவமே .. சிவமே

சைவமும் செந்தமிழும் எங்கள் இரண்டு கண்களே
வையகம் எங்கும் பரந்து வாழும் இலங்கை மைந்தரே
உலகம் கண்ட முதல் மாந்தனும் தமிழ் வேந்தனும் நீயே
சிவன் ஆட்சியில் வேல் சாட்சியாய் நிலம் ஆள்பவன் நீயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஓம் சிவா சிவ ஈஸ்வரா பரமேஸ்வரா சிவமே**
**ஈழமே சிவபூமியே அதில் வாழ்வதில் சுகமே**

**சைவமே .. சிவ சைவமே .. சிவ சைவமே .. சிவமே**
**சைவமே .. சிவ சைவமே .. சிவ சைவமே .. சிவமே**

பழங்காலத்தில் குமரி எனும் பெரும் பூமியின் புதல்வன்
சிவசுந்தரன் வேல்பாண்டியன் முதல் சங்கத்தின் தலைவன்
**பழங்காலத்தில்..**
கடல் கோள்களில் அழியாமலே எதிர் நீச்சல் போட்டவனே
சிவபூமியில் தமிழ் தேசத்தின் திரிகூடக் கோமகனே
புவிமீதிலே முதல் தோன்றிய தொல் மாந்தனே
தமிழ்க் கோமகன் சிவராவணன் உன் பிள்ளையே ...

**ஓம் சிவா சிவ ஈஸ்வரா பரமேஸ்வரா சிவமே**
**ஈழமே சிவபூமியே அதில் வாழ்வதில் சுகமே**

**சைவமும் செந்தமிழும் எங்கள் இரண்டு கண்களே**
**வையகம் எங்கும் பரந்து வாழும் இலங்கை மைந்தனே**

**சைவமே .. சிவ சைவமே .. சிவ சைவமே .. சிவமே**
**சைவமே .. சிவ சைவமே .. சிவ சைவமே .. சிவமே**

பத்துப் பாடலும் எட்டுத் தொகைகளும் உந்தன் சரித்திரம் சொல்லுமே
ஐந்து திணைகளில் ஐந்து தெய்வங்கள் உந்தன் வாழ்க்கையின்
அங்கமே
**பத்துப் பாடலும் ...**
குறிஞ்சி முருகனும் முல்லை மாயோனும் பாலை கொற்றவை கடவுள்
மருதம் வேந்தனும் நெய்தல் வருணனும் வயல் கடலுக்கு காவல்
தொல்காப்பியர் திருவள்ளுவர் நம் வம்சமே
நாயன்மார்களும் ஆழ்வார்களும் நம் சொந்தமே ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஓம் சிவா சிவ ஈஸ்வரா பரமேஸ்வரா சிவமே**
**ஈழமே சிவபூமியே அதில் வாழ்வதில் சுகமே**

**சைவமும் செந்தமிழும் எங்கள் இரண்டு கண்களே..**
**வையகம் எங்கும் பரந்து வாழும் இலங்கை மைந்தனே**

**சைவமே .. சிவ சைவமே .. சிவ சைவமே .. சிவமே**
**சைவமே .. சிவ சைவமே .. சிவ சைவமே .. சிவமே**

சிவனொளிமலை சிவகிரிமலை குதிரைமலை சிவனே
கதிரைமலை உகந்தைமலை நல்லூர் வரை கந்தனே
**சிவனொளிமலை ...**
முன்னேஸ்வர கோணேஸ்வர கேதீஸ்வர சிவ்னே
தொண்டேஸ்வரம் நகுலேஸ்வரம் அடி நுனி முதல் சிவனே
திருமூலரின் திருவாய்மொழி சிவபூமியே
அதில் வாழ்வதில் பெருமை கொள்வோம் எம் மைந்தரே ...

**ஓம் சிவா சிவ ஈஸ்வரா பரமேஸ்வரா சிவமே**
**ஈழமே சிவபூமியே அதில் வாழ்வதில் சுகமே**

சைவமும் செந்தமிழும் எங்கள் இரண்டு கண்களே
வையகம் எங்கும் பரந்து வாழும் இலங்கை மைந்தனே
உலகம் கண்ட முதல் மாந்தனும் தமிழ் வேந்தனும் நீயே
சிவன் ஆட்சியில் வேல் சாட்சியாய் நிலம் ஆள்பவன் நீயே ...
**ஓம் சிவா சிவ ஈஸ்வரா பரமேஸ்வரா சிவமே**
**ஈழமே சிவபூமியே அதில் வாழ்வதில் சுகமே**

**சைவமே .. சிவ சைவமே .. சிவ சைவமே .. சிவமே-**
**சைவமே .. சிவ சைவமே .. சிவ சைவமே .. சிவமே (3)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவ சிவ சிவ சிவ ஈஸ்வரா பரமேஸ்வரா

சிவன் எனக்கு மிகவும் பிடித்த கடவுள். காரணம் அநீதியை, அக்கிரமத்தை அழித்து, நல்லவர்களைக் காக்கும் வல்லமை அவருக்கு மட்டுமே உண்டு.

முன்பெல்லாம் இப்பூலோகம் புனிதம் நிறைந்து காணப் பட்டதாகவும், அதனால் எங்கும் தெய்வீகம் நிறைந்து இருந்ததாகவும், அதனால் அநியாயம், அக்கிரமங்கள் செய்ய மனிதன் பயப்பட்டதாகவும், ஆனால் இன்று மனிதனின் பயபக்தி யின்மையால் புனிதம் அழிந்து விட்டதாகவும் முதியோர் கூறுவர். இன்று கலியுகம் முற்றி அக்கிரமங்கள் தலை விரித் தாடுகின்றன. கெட்டவர்கள் உயர்ந்து கொண்டே போகிறார்கள். நல்லவர்கள் தாழ்ந்து கொண்டே போகிறார்கள். இந்த நிலையை ஒருகணம் நினைத்துப் பார்த்தபோது இந்தப் பாடல் உருவானது.

சிவ சிவ சிவனே-ஹர ஹர சிவனே
சிவ சிவ சிவனே-ஹர ஹர சிவனே

ஓம் ................................ நமசிவாய

சிவ சிவ சிவ சிவ ... சிவ சிவ சிவ சிவ ஈஸ்வரா ... பரமேஸ்வரா
சிவ சிவ சிவனே ...
சிவ சிவ சிவ சிவ ... சிவ சிவ சிவ சிவ
சிவ சிவ சிவ சிவ ... சிவ சிவ சிவ சிவ ஈஸ்வரா ... பரமேஸ்வரா
ஹர ஹர சிவனே

திரிபுரம் எரித்து அரக்கரை அழித்த விரிசடை ஈசா மகேஸ்வரா ...
பகைவரை ஜெயிக்க தேவரைக் காக்க நஞ்சுண்ட ஈசா மகேஸ்வரா...
அகிலேஸ்வரா ... சர்வேஸ்வரா ...
அகிலேஸ்வரா ... சர்வேஸ்வரா...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தீம் தனக்குத்தன-தீம் தனக்குத்தன-தீம் தனக்குத்தன தீம்**
**ஓம் சாம்ப சிவ-ஓம் சாம்ப சிவ-ஓம் சாம்ப சிவ ஓம் (2)**

**சிவ சிவ சிவ சிவ ... சிவ சிவ சிவ சிவ ஈஸ்வரா ... பரமேஸ்வரா**
**சிவ சிவ சிவனே ...**
**சிவ சிவ சிவ சிவ ... சிவ சிவ சிவ சிவ-**
**சிவ சிவ சிவ சிவ ... சிவ சிவ சிவ சிவ- ஈஸ்வரா ... பரமேஸ்வரா**
**ஹர ஹர சிவனே**

வில்லைப் பூட்டாமல் நாணை வளைக்காமல் அண்ட சராசரம்
நடுங்கிடவே...
ரத்தம் சிந்தாமல் வதமும் செய்யாமல் கொடிய அரக்கரை
அழித்திடவே...
ஆவேச புன்னகை செய்து தீப்பிழம்பை அதில் உருவாக்கி-
முப்புரத்தை எரித்தாய் ஈசா (2)
பேய் பூதங்கள் தூளாகும் உன் நிழல் பட்டால்
அநியாயம் அகம்பாவம் அழியும் உன்னைக் கண்டால்
நீயே எமை ஆபத்தில் காத்திட ஓடி வா ஈசா ...

**தீம் தனக்குத்தன-தீம் தனக்குத்தன-தீம் தனக்குத்தன தீம்**
**ஓம் சாம்ப சிவ-ஓம் சாம்ப சிவ-ஓம் சாம்ப சிவ ஓம் (2)**

**சிவ சிவ சிவ சிவ ... சிவ சிவ சிவ சிவ ஈஸ்வரா ... பரமேஸ்வரா**
**சிவ சிவ சிவனே ...**
**சிவ சிவ சிவ சிவ ... சிவ சிவ சிவ சிவ-**
**சிவ சிவ சிவ சிவ ... சிவ சிவ சிவ சிவ-ஈஸ்வரா ... பரமேஸ்வரா**
**ஹர ஹர சிவனே**

தக தக தக தக-தக தக தக தகவென தீயும் ஓங்கி எரிந்திடவே
டம டம டம டம-டம டம டம டமவென உடுக்கை சத்தம் கேட்டிடவே
சர சர சர சர-சர சர சர சரவென நாகம் கழுத்தை சுற்றிடவே
தக்கதிமி தக்கதிமி தக்கதிமி தக்கவென ருத்ர தாண்டவம் ஆடிடவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயே அர்த்த நாரீசா வா கயிலை வாசா
நீயே எமை ஆபத்தில் காத்திடு நேசா
நீ நாயகன் காவலன் தீமையைப் பொசுக்கிடு ஈசா ...

**தீம் தனக்குத்தன-தீம் தனக்குத்தன-தீம் தனக்குத்தன தீம்**
**ஓம் சாம்ப சிவ-ஓம் சாம்ப சிவ-ஓம் சாம்ப சிவ ஓம் (2)**

**சிவ சிவ சிவ சிவ ... சிவ சிவ சிவ சிவ ஈஸ்வரா ... பரமேஸ்வரா**
**சிவ சிவ சிவனே ...**
**சிவ சிவ சிவ சிவ ... சிவ சிவ சிவ சிவ-**
**சிவ சிவ சிவ சிவ ... சிவ சிவ சிவ சிவ-ஈஸ்வரா ... பரமேஸ்வரா**
**ஹர ஹர சிவனே**

கலியுகம் முற்றி கொடுமைகள் பெருகி தலை விரித்து தினம் ஆடிடுதே
கொடியவர் அரக்கர் வஞ்சனை பெருகி நல்லவை வேறோடழிகிறதே
நெற்றிக்கண் திறந்திடு ஈசா சூலத்தை எறிந்திடு ஈசா
கொடுமைகளை அழிப்பாய் ஈசா (2)
தலைவா நந்தி வாகனா வா சூலம் ஏந்தி
இறைவா சக்தி நாதனே வா தீயை சிந்தி
நாம் காத்திருப்போம் வழி பார்த்திருப்போம் உனை நம்பி ...

**தீம் தனக்குத்தன-தீம் தனக்குத்தன-தீம் தனக்குத்தன தீம்**
**ஓம் சாம்ப சிவ-ஓம் சாம்ப சிவ-ஓம் சாம்ப சிவ ஓம் (2)**
**சிவ சிவ சிவ சிவ ... சிவ சிவ சிவ சிவ ஈஸ்வரா ... பரமேஸ்வரா**
**சிவ சிவ சிவனே ...**
**சிவ சிவ சிவ சிவ ... சிவ சிவ சிவ சிவ-**
**சிவ சிவ சிவ சிவ ... சிவ சிவ சிவ சிவ-ஈஸ்வரா ... பரமேஸ்வரா**
**ஹர ஹர சிவனே**

ஏழை வயிற்றில் சோறும் இல்லை தினமும் கொலைகள் பெருகிடுதே
ரத்தம் உறிஞ்சும் அட்டைகள் பெருகி உலகம் முழுதும் அழிகிறதே
கூற்றுவனைக் காலால் உதைத்து மார்க்கண்டன் உயிரை மீட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியத்தைக் காத்தாய் ஈசா (2)
இதுதான் சமயம் ஏன் மௌனம் மாதொரு பாகா
இன்றே தருணம் தாமதம் ஏன் உமை நாதா
இனிமேல் வாழ்வில் நிம்மதி வேண்டுமே பரமேஸ் வரா ...

**தீம் தனக்குத்தன-தீம் தனக்குத்தன-தீம் தனக்குத்தன தீம்**
**ஓம் சாம்ப சிவ-ஓம் சாம்ப சிவ-ஓம் சாம்ப சிவ ஓம் (2)**

**சிவ சிவ சிவ சிவ ... சிவ சிவ சிவ சிவ ஈஸ்வரா ... பரமேஸ்வரா**
**சிவ சிவ சிவனே ...**
**சிவ சிவ சிவ சிவ ... சிவ சிவ சிவ சிவ-**
**சிவ சிவ சிவ சிவ ... சிவ சிவ சிவ சிவ-ஈஸ்வரா ... பரமேஸ்வரா**
**ஹர ஹர சிவனே**

திரிபுரம் எரித்து அரக்கரை அழித்த விரிசடை ஈசா மகேஸ்வரா ...
பகைவரை ஜெயிக்க தேவரைக் காக்க நஞ்சுண்ட ஈசா மகேஸ்வரா...
அகிலேஸ்வரா ... சர்வேஸ்வரா ...
அகிலேஸ்வரா ... சர்வேஸ்வரா...

**தீம் தனக்குத்தன-தீம் தனக்குத்தன-தீம் தனக்குத்தன தீம்**
**ஓம் சாம்ப சிவ-ஓம் சாம்ப சிவ-ஓம் சாம்ப சிவ ஓம் (4)**

**ஓம் ................................... நமசிவாய ...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலை மலை கோணமாமலை

பண்டு தொட்டு சிவபூமி என அழைக்கப்பட்டு வந்த இவ் இலங்கைத் திருநாட்டில் 2000 வருடங்களுக்கு முன்பே நாற் திசைகளிலும் சிவாலயங்கள் அமைந்திருந்ததாக ஐதீகம். நாற் திசைக் கோயில்கள் பிற்காலத்தில் பஞ்ச ஈஸ்வரங்கள் என மக்கள் மத்தியில் பிரசித்தி பெற்றன. இப்பஞ்ச ஈஸ்வரங்களின் மகிமையைப் பாடல்களாக எழுதவேண்டும் எனும் ஆவல் பல காலமாக என் மனதில் இருந்தது.

பஞ்ச ஈஸ்வரங்களில் முதன்மையானது திருக்கோணேஸ்வரம். பாடல் பெற்ற திருத்தலம். இலங்கையில் என் மனம் கவர்ந்த இடங்களில் முதன்மையானது, முக்கியமானது. பல தடவைகள் இங்குசென்று கோணேஸ்வரப் பெருமானை வணங்கி, இத்தலத்தின் இயற்கை அழகை ரசித்துள்ளேன். அப்போது அதன் அமைப்பு, தொன்மை, மகிமை போன்றவை என் மனதில் எப்படி நிலை கொண்டிருந்ததோ அதுவே பாடலாக உருவாகியது.

மலை மலை மலை மலை கோணமாமலை
அருள் தரும் சிவன் மலை கோணமாமலை (2)
சிவ சிவ சிவனே கோணேஸ்வரா
அரஹர சிவனே மாதுமை நாதா (2)

இந்து சமுத்திரத்தின் முத்தான ஈழமணித் திருநாட்டின்
கிழக்கு நெடுங்கடல் கரை ஓரத்தில் காணும் மலை
திரிகூடகிரி எனும் மலை உச்சியில் வீற்றிருக்கும்
திருக்கோணேசப் பெருமான் கோயில் கொண்ட அழகு மலை
திருக்கோணமலை

**சிவபூமியின் கோணேஸ்வரா-**
**அழகு தெய்வமே மாதுமை நாதா (2)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மலை மலை மலை மலை கோணமாமலை**
**அருள் தரும் சிவன் மலை கோணமாமலை**

அரக்கர் கோமகன் ஆண்ட திரி கூடகிரி மலை
கன்னித்தாய் வழிபட தவம் கிடந்த தென்கயிலாய மலை
வாளால் வெட்டித் தூக்க முயன்ற சுவாமி மலை
சிவன் காலால் மிதிபட்ட இராவணன் சாமகானம் பாடிய மலை
திருக்கோணமலை
**தலை ஒன்றையும் கையையும் முறித்து**
**வீணா கானம் பாடிய மலையே (2)**

**மலை மலை மலை மலை கோணமாமலை**
**அருள் தரும் சிவன் மலை கோணமாமலை**

பல்லவர் கல்லில் கோயில் கட்டிய மலை
பாண்டியர் போற்றி வணங்கிய பாசுபத மலை
சோழப் பெரு வேந்தர்கள் சொக்கிப் போகும் அழகு வடிவில்
கோணேசப் பெருமான் வீற்றிருக்கும் அருமை மலை
திருக்கோணமலை
**மூவேந்தரும் போற்றிய மலையே**
**முத்தமிழ் கொண்ட ஆண்டவன் மலையே (2)**

**மலை மலை மலை மலை கோணமாமலை ...**
**அருள் தரும் சிவன் மலை கோணமாமலை**

ஞானசம்பந்தர் தேவாரத் திருப்பதிகம் பாடிய மலை
குடிதனை நெருக்கிப் பெருக்கமாய் தோன்றும் மலை
அருணகிரிநாதர் திருப்புகழில் போற்றிப் பாடிய மலை
நிலைக்கு நான்மறை மகத்தான பூசுரர் வாழும் மலை
திருக்கோணமலை
**தேவாரமும் திருப்புகழ் பாட்டும்**
**பாடல் பெற்ற கோண மாமலை (2)**

**மலை மலை மலை மலை கோணமாமலை**
**அருள் தரும் சிவன் மலை கோணமாமலை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னே குளக்கோட்டன் மூட்டுத் திருப்பணியை
பின்னே பறங்கி பிரிக்கவே மன்னாகேள்
பூனைக்கண் செங்கண் புகைக்கண் போனபின்
தானே வடுகாய் விடும் எனும் சாசனம் பொறித்த மலை
திருக்கோணமலை
**குளக்கோட்டனின் கோண மாமலை**
**தீர்க்க தரிசனம் கண்ட மாமலை (2)**

**மலை மலை மலை மலை கோணமாமலை**
**அருள் தரும் சிவன் மலை கோணமாமலை**

மூன்று இடத்தில் மூன்று கோயில் இருந்த மலை
முக்கண்ணன் நீலகண்டன் குடிகொண்ட மூல மலை
மூத்தவர் முதுமுதல்வனை வணங்கிய முக்கோண மலை
மூஷிக வாகனனின் அம்மையப்பன் குடியிருக்கும் சுவாமி மலை
திருக்கோணமலை
**மூர்த்தி தலம் தீர்த்தம் கொண்ட**
**முக்கண்ணன் வாழும் சுவாமி மலை (2)**

**மலை மலை மலை மலை கோணமாமலை**
**அருள் தரும் சிவன் மலை கோணமாமலை**

அன்னைக்கு அன்னையாய் தந்தைக்குத் தந்தையாய்
ஆதரித்து பக்தர்களைக் காக்கும் ஈசன் வாழும் மலை
ஆலகால விடமுண்ட நஞ்சுண்டார் குடிகொண்ட கோயில் மலை
அழகும் அருளும் கொண்ட ஆலமர் செல்வன் வாழும் மலை
திருக்கோணமலை
**அன்பின் வடிவே கோணேஸ்வரா**
**அழகு தெய்வமே மாதுமை நாதா (2)**

**மலை மலை மலை மலை கோணமாமலை**
**அருள் தரும் சிவன் மலை கோணமாமலை**
**சிவ சிவ சிவனே கோணேஸ்வரா-**
**அரஹர சிவனே மாதுமை நாதா (3)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேதீஸ்வரா திருக்கேதீஸ்வரா

பஞ்ச ஈஸ்வரங்களில் இரண்டாவது தலம் திருக்கேதீஸ்வரம். பாடல் பெற்ற திருத்தலம். ஈழத் திருநாட்டின் வடமேற்கில் அமைந்துள்ளது. இத்தலத்தை தரிசிக்கும் போதெல்லாம் நான் மிகவும் உணர்ந்து ரசிப்பது இங்கு மகாலிங்கமாக வீற்றிருக்கும் சிவலிங்கத் திருமேனியையும், பால் போன்ற நீர் கொண்ட பாலாவித் தீர்த்தத்தையுமே.

ஒரு தடவை சிவராத்திரி தினத்தன்று இம்மகாலிங்கத்தின் முன்பாக சில மணி நேரமும், பாலாவித் தீர்த்தப் படித்துறையில் சில மணி நேரமும் அமர்ந்திருந்தபோது என் மனதில் பிரவாக மாகப் பிறந்தது இப்பாடல்.

கேதீஸ்வரா திருக் கேதீஸ்வரா-கௌரி மணாளா கேதீஸ்வரா
ஜோதீஸ்வரா ஜேக ஜோதீஸ்வரா-ஆதீஸ்வரா அருள் ஆதீஸ்வரா
கேட்கும் வரம் கொடுக்கும் சிவனே கேதீஸ்வரா (2)
பார்க்கும் இடம் எல்லாம் நீயே கேதீஸ்வரா (2)

**கேதீஸ்வரா திருக் கேதீஸ்வரா-கௌரி மணாளா கேதீஸ்வரா**
**ஜோதீஸ்வரா ஜேக ஜோதீஸ்வரா-ஆதீஸ்வரா அருள் ஆதீஸ்வரா**

மாதோட்டக் கரையினில் கேதீஸ்வரம்-
மாதொரு பாகன் வாழும் கேதீஸ்வரம் (2)
மாந்தைப் பெருந்துறையில் கேதீஸ்வரம்-
மாமன்னர் மக்கள் தொழும் கேதீஸ்வரம் (2)
கேது எனும் பகவான் வந்து-ஈஸ்வரனை வேண்டித் தொழுது
கேட்ட வரம் எல்லாம் பெற்ற கேதீஸ்வரம்
மண்ணாளும் ... விண்ணாளும் ... சிவன் ஆளும் ...
கண்கண்ட கேதீஸ்வரம் ... கண்கண்ட கேதீஸ்வரம்
கண்கண்ட கேதீஸ்வரம் ... கண்கண்ட கேதீஸ்வரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேதீஸ்வரா திருக் கேதீஸ்வரா-கௌரி மணாளா கேதீஸ்வரா**
**ஜோதீஸ்வரா ஜேக ஜோதீஸ்வரா-ஆதீஸ்வரா அருள் ஆதீஸ்வரா**

மா துவட்டா வந்த தலமல்லவா-
விஸ்வ கர்மா வாழ்ந்த இடமல்லவா (2)
மாயன் மகள் அழகு மண்டோதரி-
ஈசன் அருள் கேட்ட குணசுந்தரி (2)
ஈஸ்வரனே குழந்தை ஆகி-மண்டோதரி முன்னே தோன்றி
ஆசி அருள் தந்த திருக் கேதீஸ்வரம் (2)
முன்னோரும் ... மூத்தோரும் ... லிங்கேசன் ...
அருள் பெற்ற கேதீஸ்வரம்-அருள் பெற்ற கேதீஸ்வரம்
அருள் பெற்ற கேதீஸ்வரம்-அருள் பெற்ற கேதீஸ்வரம்

**கேதீஸ்வரா திருக் கேதீஸ்வரா-கௌரி மணாளா கேதீஸ்வரா**
**ஜோதீஸ்வரா ஜேக ஜோதீஸ்வரா-ஆதீஸ்வரா அருள் ஆதீஸ்வரா**

சம்பந்தர் பாடிய கேதீஸ்வரம்-
சங்கடம் நீக்கிடும் கேதீஸ்வரம் (2)
சுந்தரர் போற்றிய கேதீஸ்வரம்-
வந்தாரை வாழ வைக்கும் கேதீஸ்வரம் (2)
பாலாவித் தீர்த்தம் ஆடி-லிங்க அபிஷேகம் செய்து
பக்தர்கள் கொண்டாடும் கேதீஸ்வரம் (2)
தேவாரப் ... பதிகங்கள் ... அருளோடு ...
பாடல் பெற்ற கேதீஸ்வரம் ... பாடல் பெற்ற கேதீஸ்வரம்
பாடல் பெற்ற கேதீஸ்வரம் ... பாடல் பெற்ற கேதீஸ்வரம்

**கேதீஸ்வரா திருக் கேதீஸ்வரா-கௌரி மணாளா கேதீஸ்வரா**
**ஜோதீஸ்வரா ஜேக ஜோதீஸ்வரா-ஆதீஸ்வரா அருள் ஆதீஸ்வரா**

சோழ ராசன் கட்டிய கேதீஸ்வரம்-
வாழவழி காட்டிய கேதீஸ்வரம் (2)
நீலகண்டன் வாழும் கேதீஸ்வரம்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலமுக்தி தரும் கேதீஸ்வரம் (2)
சிவராத்திரி நாளில் பக்தர்-நடுராத்திரி பூஜை நேரம்
மாலிங்க குடமுழுக்காட்டும் கேதீஸ்வரம் (2)
தேரோடும் ... பெருவீதி ... பாரெங்கும் ...
புகழ் கொண்ட கேதீஸ்வரம் ... புகழ் கொண்ட கேதீஸ்வரம்
புகழ் கொண்ட கேதீஸ்வரம் ... புகழ் கொண்ட கேதீஸ்வரம்

**கேதீஸ்வரா திருக் கேதீஸ்வரா-கௌரி மணாளா கேதீஸ்வரா**
**ஜோதீஸ்வரா ஜேக ஜோதீஸ்வரா-ஆதீஸ்வரா அருள் ஆதீஸ்வரா**

சேக்கிழார் பாடிய கேதீஸ்வரம்-
நாவலர் போற்றிய கேதீஸ்வரம் (2)
மேற்குக் கரை கொண்ட கேதீஸ்வரம்-
மேரு நடு நாடி கேதீஸ்வரம் (2)
தினந்தோறும் பக்தர் கூட்டம்-திருப்பள்ளி எழுச்சி பாடி
கேதீச்சர நாதனை எழுப்பும் கேதீஸ்வரம் (2)
மாதோட்டத் ... துறையோடு ... பாலாவிக் ...
கரை கொண்ட கேதீஸ்வரம்- கரை கொண்ட கேதீஸ்வரம்-
கரை கொண்ட கேதீஸ்வரம்- கரை கொண்ட கேதீஸ்வரம்-

**கேதீஸ்வரா திருக் கேதீஸ்வரா-கௌரி மணாளா கேதீஸ்வரா**
**ஜோதீஸ்வரா ஜேக ஜோதீஸ்வரா-ஆதீஸ்வரா அருள் ஆதீஸ்வரா**
கேட்கும் வரம் கொடுக்கும் சிவனே கேதீஸ்வரா-
பார்க்கும் இடம் எல்லாம் நீயே கேதீஸ்வரா (3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவ சிவ ஈசனே முன் ஈஸ்வரனே சிவனே

இலங்கையின் மேற்கில் மாயவன் ஆற்றின் அருகில் அமைந்துள்ள சிவத்தலம் தான் முன்னேஸ்வரம். இலங்கையில் உள்ள கோயில்களில் அதிக அளவில் புராதன சின்னங்களைக் கொண்ட ஒரே கோயில் இதுவே.

பல தடவைகள் இக்கோயிலுக்குச் சென்று, இங்குள்ள ஈசனைத் தரிசித்து, இதன் கருவறையில் உள்ள சிற்பங்களை மணிக் கணக்கில் பார்த்து வியந்து ரசித்துள்ளேன். அந்தத் தருணத்தில் என் மனதில் இக்கோயில் பற்றி எழுந்த நினைவுகள் பாடலாக உருவாகின.

முன்னேஸ்வரா ... முன் ஈஸ்வரா ...
முதல் ஈஸ்வரா ... முனி ஈஸ்வரா ...

சிவ சிவ ஈசனே முன் ஈஸ்வரனே சிவனே-
முதன் முதல் தோன்றிய முன் ஈஸ்வரனே சிவனே (2)
முனி வந்து பூஜை செய்து வணங்கிய சிவ சிவனே-
மாயவன் ஆற்றங்கரை தீர்த்தம் கொண்ட சிவனே (2)
**சிவ சிவ ஈசனே முன் ஈஸ்வரனே சிவனே-**
**முதன் முதல் தோன்றிய முன் ஈஸ்வரனே சிவனே (2)**

முன்னேஸ்வரர் பாதி-வடிவாம்பிகை தேவி-
வரும் பக்தருக்கு கேட்ட வரம் வழங்கும் அர்த்தநாரி (2)
அங்கு முத்து சலாபம்-அந்தக் கடற்கரை ஓரம்-
ஏழை மீனவன் கண் காட்சி தந்த அருள் மிகு தேவி (2)
இராவணன் வந்து முன்ஈசனை வழிபட்டான்-
இராமனும் வந்து இங்கு தோஷம் நீங்கிச் சென்றான் (2)
சிவ முன்னேஸ்வரனே ..... சிவ முனி ஈஸ்வரனே ... (2)

**சிவ சிவ ஈசனே முன் ஈஸ்வரனே சிவனே-**
**முதன் முதல் தோன்றிய முன் ஈஸ்வரனே சிவனே (2)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகா பாரத காலம்-வியாச முனிவர் வந்தாரே-
சிவ தோஷம் நீங்க வேண்டி முன்னை நாதரை வழிபட்டார் (2)
சிவ தீர்த்தத்தைப் பருகி-சிவன் ஆணையில் உருகி-
சிவ லிங்கம் ஒன்றை வைத்து முன் ஈஸ்வரர் அருள் பெற்றார் (2)
குளக்கோட்ட மன்னனும் கோயில் திருப்பணி செய்தான்-
எட் டெட்டு ஊர்களை முன்னை நாதருக் களித்தான் (2)
சிவ முன்னேஸ்வரனே ..... சிவ முனி ஈஸ்வரனே ... (2)

**சிவ சிவ ஈசனே முன் ஈஸ்வரனே சிவனே-**
**முதன் முதல் தோன்றிய முன் ஈஸ்வரனே சிவனே (2)**

கோட்டை அரசன் வந்தானே-கோயில் பணிகள் செய்தானே-
அதைக் கல்லினிலே சாசனத்தில் எழுதியும் வைத்தானே (2)
ஒன்ப தாவது ராஜா -முன்னை நாதரை வணங்கி-
பல ஊர்களை சிவன் பாதம் வைத்து பொறித்து வைத்தானே (2)
ராகுல தேரர் போற்றிப் பாடிய சிவனே-
கோகிலக்குயிலும் வணங்கிச் சென்ற ஈசனே (2)
சிவ முன்னேஸ்வரனே ..... சிவ முனி ஈஸ்வரனே ... (2)

**சிவ சிவ ஈசனே முன் ஈஸ்வரனே சிவனே-**
**முதன் முதல் தோன்றிய முன் ஈஸ்வரனே சிவனே (2)**
**முனி வந்து பூஜை செய்து வணங்கிய சிவ சிவனே-**
**மாயவன் ஆற்றங்கரை தீர்த்தம் கொண்ட சிவனே (2)**

**சிவ சிவ ஈசனே முன் ஈஸ்வரனே சிவனே-**
**முதன் முதல் தோன்றிய முன் ஈஸ்வரனே சிவனே (2)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓம்நமோஓம் ஓம்நமோஓம் நகுல ஈஸ்வரா ஓம்ஓம்

இலங்கையின் வடதிசைக் கோயில் நகுலேஸ்வரம். இக் கோயில் பற்றிய பல ஐதீகங்கள் உண்டு. ராமனும், முசுகுந்த சக்கரவர்த்தியும் இத்திருத்தலத்தை தரிசித்தனர் என்பர்.

யுத்த சூழ்நிலையில், ஒரு இக்கட்டான காலகட்டத்தில் இந்தத் திருத்தலத்தை தரிசிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அந்த சமயத்தில் வட கடல் ஓரத்தில் அமைந்திருந்த கீரிமலை தீர்த்தக் கேணியில் நீராடி, அதன் உச்சிப் படியில் அமர்ந்து கொண்டு, கடல் அழகையும், நீள் அரைவட்ட கேணி அழகையும் பல மணிநேரம் பார்த்து ரசித்தேன். அமைதியான கடல் அலை, இதமான காற்று, தெய்வீக மனநிலை. அப்போது உருவான பாடல் இது.

நகுலேச ஈசனே ... கீரிமலை வாசனே ...
திருத்தம்ப லேஸ்வரனே ... உன் திருவடிகள் போற்றி போற்றி ...
திருவடிகள் போற்றி போற்றி ...

ஓம் நமோ ஓம்-ஓம் நமோ ஓம்
நகுல ஈஸ்வரா ஓம் ஓம்-
சிவ சிவ ... ஓம் நமோ ஓம்-ஓம் நமோ ஓம்
நகுல ஈஸ்வரா ஓம் ஓம்

நர்த்தனம் ஆடும் நடன ராஜனே நகுலேஸ்வர ஈசா-
பக்தரின் குறை தீர்க்க வந்த திரு நகுலேஸ்வர ஈசா (2)
நகுலேஸ்வரனே எமை ஆள்பவனே ஈஸ்வரா ... ஆ ...ஆ ...ஆ ...
திருத் தம்பலனே திருவடி நாதா ஈஸ்வரா

**சிவ சிவ .... ஓம் நமோ ஓம்- ஓம் நமோ ஓம்**
**நகுல ஈஸ்வரா ஓம் ஓம்**
**சிவ சிவ .... ஓம் நமோ ஓம்- ஓம் நமோ ஓம்**
**நகுல ஈஸ்வரா ஓம் ஓம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்கரையில் மலைக் ஒன்று-அது சிவன் வாழும் குன்று
பார்வதி பரமேஸ்வரன் குடி கொண்ட திருத்தம்ப லேஸ்வரம்
உமை அம்மை நீராட-சிவன் உருவாக்கிய தீர்த்தம்
கண்டகி எனும் பெயரிலே கோடி புண்ணியம் தரும் பிராப்தம்
தேவரும் முனிவரும் நீராடிய உமை தீர்த்தம் அதுவல்லவா
புண்ணியபுரம் எனும் பேரை நாட்டுக்கு தந்த ததுவல்லவா (2)
ஆலமர் செல்வன் ஆதிரை உடையோன்
வரம்தரும் ... வழிதரும் ... அழகிய ... சிவ சிவ ...

**ஓம் நமோ ஓம்-ஓம் நமோ ஓம்**
**நகுல ஈஸ்வரா ஓம் ஓம்**
**சிவ சிவ .... ஓம் நமோ ஓம்- ஓம் நமோ ஓம்**
**நகுல ஈஸ்வரா ஓம் ஓம்**

பஞ்ச ஈஸ்வரம் ஐந்து-நகுலேஸ்வரம் அதில் ஒன்று
ராமனும் முசு குந்தனும் வழிபட்ட நகுல சிவ ஈஸ்வரம்
அர்ச்சுனன் நளனோடு-சித்தர் முனிவர்கள் கண்ட
இலங்கையின் வட திசையிலே தலம் கொண்ட நகுல சிவ ஈஸ்வரம்
கீரிமுகம் கொண்ட நகுல முனிவர் திருத்தம்பலேஸ்வரம் வந்தார்-
புனித நீராடி சிவனை வணங்கி தன் அழகு முகத்தினை மீட்டார் (2)
தம்பலேஸ்வரம் நகுல ஈஸ்வரம்
ஆனது ... அருளது ... அழகிய ... சிவ சிவ ...

**ஓம் நமோ ஓம்-ஓம் நமோ ஓம்**
**நகுல ஈஸ்வரா ஓம் ஓம்**
**சிவ சிவ .... ஓம் நமோ ஓம்- ஓம் நமோ ஓம்**
**நகுல ஈஸ்வரா ஓம் ஓம்**

கீரிமலை எனும் தீர்த்தம்-பாவங்கள் எல்லாம் தீர்க்கும்
கொடிவினை பல முன்வினை பெரும் நோய்பிணி எல்லாம் போக்கும்
மாருதப் புர வல்லி-பேரழகு இள வரசி
குதிரை முகத்தோடு தீர்த்தமாடி தன் அழகு முகத்தினை மீட்டாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய ராஜனின் திருப்பணி கண்ட கோயில் இதுவல்லவா-
வடதிசை காவல் தெய்வமாக சிவன் வாழ்ந்த இடமல்லவா (2)
வேண்டும் வரம் தரும் வேதநாத சிவன்
அருளினை ... வழங்கிய ... அழகிய ... சிவ சிவ ...

**ஓம் நமோ ஓம்-ஓம் நமோ ஓம்**
**நகுல ஈஸ்வரா ஓம் ஓம்**
**சிவ சிவ .... ஓம் நமோ ஓம்- ஓம் நமோ ஓம்**
**நகுல ஈஸ்வரா ஓம் ஓம்**

நர்த்தனம் ஆடும் நடன ராஜனே நகுலேஸ்வர ஈசா-
பக்தரின் குறை தீர்க்க வந்த திரு நகுலேஸ்வர ஈசா
நர்த்தனம் ஆடும் நடன ராஜனே நகுலேஸ்வர ஈசா-
பக்தரின் குறை தீர்க்க வந்த திரு நகுலேஸ்வர ஈசா
நகுலேஸ்வரனே எமை ஆள்பவனே ஈஸ்வரா ... ஆ ...ஆ ...ஆ ...
திருத் தம்பலனே திருவடி நாதா ஈஸ்வரா

**சிவ சிவ ... ஓம் நமோ ஓம்-ஓம் நமோ ஓம்-**
**நகுல ஈஸ்வரா ஓம் ஓம்**
**சிவ சிவ ... ஓம் நமோ ஓம்-ஓம் நமோ ஓம்-**
**நகுல ஈஸ்வரா ஓம் ஓம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொண்டேஸ்வரா தென் ஈஸ்வரா

இலங்கையின் பஞ்ச ஈஸ்வரங்களில் முற்றாக அழிந்து போன சிவாலயமே சந்திரசேகர ஈஸ்வரமாகும். தொண்டேஸ்வரம் எனப் பலராலும் அறியப்பட்ட இச்சிவாலயம் இலங்கையின் தென் முனையில் அமைந்திருந்தது. ஐரோப்பியர்களால் அழிக்கப்பட்ட இச்சிவாலயத்தின் சுவடுகளைத் தேடி பல வருடங்களுக்கு முன்பு இக்கோயில் அமைந்திருந்த தலமான தெய்வந்துறை எனும் தெவி நுவரைக்குச் சென்றுள்ளேன்.

அங்கு கோயில் அமைந்திருந்து, அழிந்து போன கடலோர த்தில், இலங்கையின் அதி தென்முனையில், வெளிச்ச வீட்டின் அருகில், கடலில் உள்ள பாறையில், மனவேதனையோடு அமர்ந்து, கடலையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த, நெஞ்சம் வலித்த, மனமெல்லாம் ஆதங்கம் பொங்கி வழிந்த அந்தத் தருணத்தில் எழுந்தது தான் இப்பாடல்.

தொண்டேஸ்வரா ... தென் ஈஸ்வரா ...
நகரீஸ்வரா ... நாகேஸ்வரா ... (2)
சந்ர சேக ரேஸ்வர ஈசா-சந்ர மௌலீ ஈஸ்வர ஈசா (2)
உன் பாதம் வணங்க வந்தோம்-
என்றும் உன் வேதம் பாட வந்தோம் (2)

**தொண்டேஸ்வரா ... தென் ஈஸ்வரா ...**
**நகரீஸ்வரா ... நாகேஸ்வரா ...**

தேடித் தேடி அலைந்தோம்-தேசமெல்லாம் திரிந்தோம்
உன்னைக் காண முடியவில்லை-
என்ன குற்றம் செய்தோம்-ஏனோ நீயும் மறைந்தாய்-
ஒன்றும் இன்று புரியவில்லை (2)
பிழை செய்தால் பொறுத்தருள்வாய் எங்கள் ஈசனே-
தலைமுறையாய் பணி செய்வோம் என்றும் நேசனே (2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணாளும் பெருந் தலைவா
எமை எந்நாளும் அருள் துணைவா (2)

**தொண்டேஸ்வரா ... தென் ஈஸ்வரா ...**
**நகரீஸ்வரா ... நாகேஸ்வரா ...**

நாற்திசைக் கோயிலில்-தென்திசைக் காவலன்
ஆதி பரமேஸ்வரன் நீ
தெய்வந்துறை நாயகன்-தேவநகர் ஈஸ்வரன்
திருக் கோலம் கொண்டவன் நீ (2)
கண்ணெதிரே காட்சி கொடு எங்கள் லிங்கேசா-
உன்னருளே வேண்டுமைய சந்திர மௌலீசா (2)
மண்ணோடு மறைந்தாயே-
எந்தன் கண்ணோடு கலந்தாயே (2)

**தொண்டேஸ்வரா ... தென் ஈஸ்வரா ...**
**நகரீஸ்வரா ... நாகேஸ்வரா ... (2)**

தங்கத் திருக் கோபுரம்-லிங்கம் வைர மாணிக்கம்
கொண்ட உந்தன் கோயில் அய்யா
கடல் ஓடும் கப்பல்கள்-காணும் உந்தன் தீபங்கள்
நல்ல வழி காட்டி அய்யா (2)
அந்நியனின் கண்ணைக் குத்திய உன் திருக் கோலமே
அதனாலே அழித்தானே உந்தன் கோயிலை
அழித்தவனை பூண்டோடு ஒழித்தாய் நாதனே-
அதுதானே உன் சக்தி தேவர் தேவனே-
உலகாளும் நாயகனே-
நீ உமையாளும் மன்னவனே (2)

**தொண்டேஸ்வரா ... தென் ஈஸ்வரா ...**
**நகரீஸ்வரா ... நாகேஸ்வரா ... (2)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதுறையின் ஈசா-மக்கள் குறை தீர்க்க
மீண்டும் வர வேண்டும் அய்யா-
தேவ தாசி ஆடிட-வேத மந்திரம் ஓதிட
உந்தன் கோயில் இருந்ததய்யா (2)
ஆயிரங்கால் மண்டபத்தில் ஆடல் கண்டோமே -
ஆதவனின் உதயம் மறைவு அங்கே கண்டோமே (2)
வரவேண்டும் வைத்தீசா-அருள் தர வேண்டும் உமை பாலா (2)

**தொண்டேஸ்வரா ... தென் ஈஸ்வரா ...**
**நகரீஸ்வரா ... நாகேஸ்வரா ... (2)**

சந்ர சேக ரேஸ்வர ஈசா-சந்ர மௌலீ ஈஸ்வர ஈசா
உன் பாதம் வணங்க வந்தோம்-
என்றும் உன் வேதம் பாடி வந்தோம் (2)
தொண்டேஸ்வரா ... தென் ஈஸ்வரா ...
நகரீஸ்வரா ... நாகேஸ்வரா ...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகன் பாடல்கள்

## அந்தக் கந்தனின் நாமம்

இலங்கையில் பஞ்ச ஈஸ்வரங்களுக்கு அடுத்த படியாக அதிகமான பக்தர்கள் செல்லும் இடம் கதிர்காமமாகும். அதிலும் ஆடி மாதத்தில் மாலை போட்டு, அடர்ந்த காட்டின் ஊடாக கதிர்காமத்திற்கு பாத யாத்திரை செல்வது முருக வழிபாட்டில் நமக்குக் கிடைக்கும் மிகப்பெரிய வரப் பிரசாதமாகும். அப்படி யான வரப்பிரசாதத்தை முதல் தடவையாக 2012 ஆம் ஆண்டு பெறும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது.

அதுவரை வாழ்க்கையில் அனுபவிக்காத, கிடைக்காத, உணராத, புதுமையான அனுபவம் அந்தப் பாதயாத்திரையில் கிடைத்தது. ஐந்து நாட்கள் காடு, மேடு, மலை, மணல், ஆறு, குளம், களப்பு, சேறு, வெளி, வெட்டை எனக் கடந்து, சுட்டெரிக்கும் வெயில், கொட்டும் மழை, கடுங்குளிர், புயல் காற்று ஆகியவற்றைத் தாங்கிக் கொண்டு, துரத்தும் யானை, மிரட்டும் சிறுத்தை, விரட்டும் குளுமாடு, நடுக்கும் பாம்பு, கடிக்கும் விஷப்பூச்சி ஆகியவற்றில் இருந்து கந்தன் காக்க, கிடைப்பதை உண்டு, இருப்பதை உடுத்து, அவன் நினைவாக, அவன் புகழை மட்டும் பாடி, ஆடி ஆனந்தமாக நடந்து சென்று இறுதியில் அவன் கோயில் கண்டு, அவன் முகம் தரிசிக்கும் போது நம் கண்களில் இருந்து வழியும் ஆனந்தக் கண்ணீர்.... என்னைப் பொறுத்தவரை அதை சொல்ல உலகில் எந்த மொழியிலும் வார்த்தைகள் கிடையாது.

அப்படிப்பட்ட கிடைத்தற்கரிய புதுவிதமான அனுபவத்தை, அந்த ஐந்து நாட்களும் தாங்கிச் சென்ற இடங்கள், நீராடிய காட்டாறுகள், இளைப்பாறிய வெளிகள் ஆகியவை பற்றிய விபரங்களை சக பக்தர்களிடம் எப்படிப் பகிர்ந்து கொள்வது என எண்ணிய போது இந்தப் பாடல் உருவானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் கந்தனின் நாமம் ..... அவன் கண்கவர் கோலம் ..... (2)
அந்த உகந்தை மலை சந்நிதானத்தில் குருசாமியின் கோஷம்-
அதை ஒருநாளும் மறக்க முடியவில்லை சாமி (2)
மறக்க முடியுமா சாமி- மறக்க முடியுமா சாமி-
மறக்க முடியுமா சாமி- மறக்க முடியுமா சாமி (2)

ஆடி மாதத்தில் மாலை போட்டதை நெஞ்சம் மறந்திடுமா-
அழகு முருகனைக் காண யாத்திரை போனது மறந்திடுமா (2)
கல்லும் முள்ளும் குத்திடவே காட்டு வழி நடந்து-
கந்தக் கவசம் படித்தது மறந்திடுமா
அந்த வண்ணாத்தி ஆற்றில் குளித்ததும்-
அந்த வாகூர வெளியில் படுத்ததும் (2)
கருப்பன் தரிசனமும் மறக்க முடியவில்லை சாமி ......

**மறக்க முடியுமா சாமி- மறக்க முடியுமா சாமி-**
**மறக்க முடியுமா சாமி- மறக்க முடியுமா சாமி (2)**

அந்தக் கூமுனைக் காடு ...... அது பட்சிகள் வீடு ...... (2)
அங்கு பறவைக் குஞ்சு கீச்சிடும் சத்தம் இனிதாகக் கேட்கும்-
அதை ஒருநாளும் மறக்க முடியவில்லை சாமி (2)
**மறக்க முடியுமா சாமி- மறக்க முடியுமா சாமி-**
**மறக்க முடியுமா சாமி- மறக்க முடியுமா சாமி (2)**

கும்புக்கன் அம்மன் சந்நிதி முன்னால் பொங்கலும் மறந்திடுமா-
நம்பிக்கையுடனே காளியின் மடியில் தங்கலும் மறந்திடுமா (2)
பொங்கல் அவல் கடலை வைத்து அம்மன் முகம் மறைக்க-
தங்க படையல் படைத்ததும் மறந்திடுமா
அந்த கும்புக்கன் ஆற்றில் குளித்ததும்-
அதிகாலை வேளையில் விழித்ததும் (2)
காளி தரிசனமும் மறக்க முடியவில்லை சாமி ......

**மறக்க முடியுமா சாமி- மறக்க முடியுமா சாமி-**
**மறக்க முடியுமா சாமி- மறக்க முடியுமா சாமி (2)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் கரம்பை ஆறு ...... அது கரடிக் காடு ......
அதில் மணலெங்கும் பக்தர் கூட்டம் இளைப்பாறும் காட்சி-
அதை ஒருநாளும் மறக்க முடியவில்லை சாமி (2)
**மறக்க முடியுமா சாமி- மறக்க முடியுமா சாமி-**
**மறக்க முடியுமா சாமி- மறக்க முடியுமா சாமி (2)**

நாவலடியிலே மூன்று கிணற்றிலே குளித்தது மறந்திடுமா-
ஆளில்லாத நடுக்காட்டில் பஜனை படித்தது மறந்திடுமா (2)
காடு மடு மேடு தாண்டி கால் நடையாய் நடந்து-
வீடு பேறு வேண்டியதும் மறந்திடுமா
உப்பாற்றில் மணிக்கணக்கில் குளித்ததும்
உடல் சோர்வில் உறங்கி விழித்ததும் (2)
வைரவர் கோயிலடியும் மறக்க முடியவில்லை சாமி ......

**மறக்க முடியுமா சாமி- மறக்க முடியுமா சாமி-**
**மறக்க முடியுமா சாமி- மறக்க முடியுமா சாமி (2)**

அந்த தொலையா காடு ...... அதில் வழிநடை போடு ...... (2)
கள்ள வியாளை அது அற்புத பூமி- கந்தன் வழி காட்டிடும் சாமி
ஒருநாளும் மறக்க முடியவில்லை சாமி (2)
**மறக்க முடியுமா சாமி- மறக்க முடியுமா சாமி-**
**மறக்க முடியுமா சாமி- மறக்க முடியுமா சாமி (2)**

மாணிக்க கங்கை மணலில் உருண்டது நெஞ்சம் மறந்திடுமா-
அக்கினிப் பலியும் அறுசுவை உணவும் என்றும் மறந்திடுமா (2)
வேல்கண்ட மலையில் வேலன் முகம் கண்டு-
வள்ளி ஆற்றில் குளித்ததும் மறந்திடுமா
கட்டகாம குளத்தினில் நடந்ததும்-
தட்டுத் தாவித் தடுமாறி விழுந்ததும் (2)
ஏழுமலை தரிசனமும் மறக்க முடியவில்லை சாமி ......

**மறக்க முடியுமா சாமி- மறக்க முடியுமா சாமி-**
**மறக்க முடியுமா சாமி- மறக்க முடியுமா சாமி (2)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரச் சோலைக் காடு ...... அது ஐங்கரன் வீடு ...... (2)
அங்கு வீடெங்கும் அடியார் கூட்டம் இளைப்பாறும் காட்சி-
அதை ஒருநாளும் மறக்க முடியவில்லை சாமி (2)
**மறக்க முடியுமா சாமி- மறக்க முடியுமா சாமி-**
**மறக்க முடியுமா சாமி- மறக்க முடியுமா சாமி (2)**

ஏழுமலையிலே ஏறும்போதிலே கால்கள் வலித்திடுமா-
ஏழையின் தோழன் வேலனைக் கண்டதும் எல்லாம் மறந்திடுமா (2)
தத்தித் தாவிப் படியேறி முக்தி அருள் வேண்டி-
உச்சிமலை தரிசனம் மறந்திடுமா
அந்த செல்லக் கதிர்காம கணபதி-
அங்கு வள்ளிக் குறத்தியின் குகையடி (2)
கோபுர தரிசனமும் மறக்க முடியவில்லை சாமி ......

**மறக்க முடியுமா சாமி- மறக்க முடியுமா சாமி-**
**மறக்க முடியுமா சாமி- மறக்க முடியுமா சாமி (2)**

அந்தக் கந்தனின் கோயில் ...... தெய் வானையின் வாயில் ......
அந்த கதிர்காம சந்நிதானத்தில் அரோகரா எனும் கோஷம்
அதை ஒருநாளும் மறக்க முடியவில்லை சாமி

**மறக்க முடியுமா சாமி- மறக்க முடியுமா சாமி-**
**மறக்க முடியுமா சாமி- மறக்க முடியுமா சாமி (4)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முருகா முருகா முருகா சரணம்

கதிர்காமத்துக்கு பல தடவைகள் சென்று முருகனைத் தரிசித்து வந்துள்ளேன். ஒரு தடவை கதிர்காமம் சென்று கந்தனைத் தரிசித்த பின் தெய்வானை அம்மன் கோயிலில் தங்கியிருந்தேன். அன்று இரவு அங்குள்ள பாபாஜியின் சமாதி அருகே படுத்துக் கொண்டு, முருகப்பெருமானை நினைத்த வண்ணம், வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தபோது ஒரு மெட்டும், பாட்டும் பிறந்தது. அப்பாடல் தான் இது.

முருகா முருகா முருகா சரணம்-
வருவாய் அருள்வாய் நலமே தருவாய் (2)

மயில் வாகனனே மகனே வருக-
அகில் ஆள்பவனின் குமரா வருக (2)
முகில் ஆண்டவனின் மருமான் வருக-
வயல் ஊர் தனிலே வலமாய் வருக (2)

**முருகா முருகா முருகா சரணம் .... (2)**

உமையாள் மகனே உலகம் நீயே-
எமை ஆள்பவனே எழிலே சேயே
சுமை யாவையுமே நீக்கும் தாயே-
இமை போல் காப்பாய் எமையே நீயே

**முருகா முருகா முருகா சரணம் .... (2)**

சிவனார் குருவே திருவேல் வடிவே-
புவனம் தனையே வலம் வந்தாயே
ஒளியே வழியே உலகின் மொழியே-
உனை நான் பணிந்தே உவகை பெறவே

**முருகா முருகா முருகா சரணம் .... (2)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஷ்ணு பாடல்கள்

## ஸ்ரீநிவாசா கோவிந்தா

விஷ்ணு பகவான் ஒவ்வொரு கால கட்டத்திலும் வெவ் வேறு காரணங்களுக்காக பத்து அவதாரங்களை எடுத்துள்ளார் என்பதை புராணங்கள் மூலம் அறிந்துள்ளோம்.

ஒரு தடவை மயூரபதி அம்மன் கோயிலில் ஐயப்பனுக்கு பஜனை நடைபெறும் மார்கழி மாதம் விஷ்ணு பகவானின் தசா வதாரத்தைக் கூறும் பாடல் ஒன்றை எழுதிப் பாட வேண்டும் எனும் எண்ணம் தோன்றியது. அப்போது நான் எழுதிய தசாவ தாரப் பாடலே இது.

ஸ்ரீநிவாசா கோவிந்தா- ஸ்ரீவெங்கடேசா கோபாலா (2)
வெங்கடரமணா கோவிந்தா- நந்தகுமாரா கோபாலா (2)
**ஸ்ரீநிவாசா கோவிந்தா- ஸ்ரீவெங்கடேசா கோபாலா (2)**

தசாவதாரம் எடுத்தாயே- தரணியில் தர்மத்தை காத்தாயே
பகஷி வாகனா பரந்தாமா- நாராயணனே நவநீதா
**ஸ்ரீநிவாசா கோவிந்தா- ஸ்ரீவெங்கடேசா கோபாலா (2)**

மச்சாவதாரம் எடுத்தாயே- கிரீரவ அரக்கனை அழித்தாயே
வேதங்கள் நான்கையும் மீட்டாயே- பிரம்மனின் கையில் கொடுத்தாயே
**ஸ்ரீநிவாசா கோவிந்தா- ஸ்ரீவெங்கடேசா கோபாலா (2)**

கூர்மாவதாரம் எடுத்தாயே- தேவர்கள் உயிரினை காத்தாயே
மந்தார மலையை உன் முதுகில்- தாங்கியே பாற்கடல் கடைந்தாயே
**ஸ்ரீநிவாசா கோவிந்தா- ஸ்ரீவெங்கடேசா கோபாலா (2)**

வராக அவதாரம் எடுத்தாயே- இரண்யாட்சனையும் அழித்தாயே
ஆழிக் கடலில் அமிழ்ந்திருந்த- பூமியை மேலே சேர்த்தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஸ்ரீநிவாசா கோவிந்தா- ஸ்ரீவெங்கடேசா கோபாலா (2)**

நரசிம்ம அவதாரம் எடுத்தாயே- இரணியன் அகந்தையை அழித்தாயே
சிம்மத்தின் வடிவம் கொண்டெழுந்தே-அவனது உடலைக் கிழித்தாயே
**ஸ்ரீநிவாசா கோவிந்தா- ஸ்ரீவெங்கடேசா கோபாலா (2)**

வாமன அவதாரம் எடுத்தாயே-அதிதியின் மகனாய்ப் பிறந்தாயே
மூன்றடி மண்ணைக் கேட்டாயே- மூவுலகினையும் ஆண்டாயே
**ஸ்ரீநிவாசா கோவிந்தா- ஸ்ரீவெங்கடேசா கோபாலா (2)**

பரசுராமனாய் வந்தாயே- மாரித் தாயைத் தந்தாயே
கார்த்தவீரியனை அழித்தாயே- காமதேனுவை மீட்டாயே
**ஸ்ரீநிவாசா கோவிந்தா- ஸ்ரீவெங்கடேசா கோபாலா (2)**

ராமாவதாரம் எடுத்தாயே- இலங்கை வேந்தனை அழித்தாயே
எண்ணிரு ஆண்டுகள் கானகத்தில்- அஞ்ஞானவாசம் புரிந்தாயே
**ஸ்ரீநிவாசா கோவிந்தா- ஸ்ரீவெங்கடேசா கோபாலா (2)**

கிருஷ்ணாவதாரம் எடுத்தாயே- திரௌபதி மானம் காத்தாயே
கீதையை உலகுக்குக் கொடுத்தாயே-கம்சனை வதம்செய்து அழித்தாயே
**ஸ்ரீநிவாசா கோவிந்தா- ஸ்ரீவெங்கடேசா கோபாலா (2)**

புத்தாவதாரம் எடுத்தாயே- போக வாழ்க்கையை துறந்தாயே
போதியின் கீழே அமர்ந்தாயே- புதியதோர் உலகம் படைத்தாயே
**ஸ்ரீநிவாசா கோவிந்தா- ஸ்ரீவெங்கடேசா கோபாலா (2)**

கலி அவதாரம் எடுப்பாயே- கலியுகத்தினையே காப்பாயே
நீதியும் வாய்மையும் நிலைத்திடவே- அதர்மமும் இம்சையும்
ஒழிந்திடவே
**ஸ்ரீநிவாசா கோவிந்தா- ஸ்ரீவெங்கடேசா கோபாலா (2)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நமோ நமோ நாராயணா

*நாராயணன் புகழ் பாடும் சில பாடல்களை மெட்டமைத்து எழுதிப் பாட வேண்டும் எனும் எண்ணம் சில நாட்களாக மனதில் குடி கொண்டிருந்தது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஐயப்பன் பஜனை காலத்தின் போது எழுதிய பாடலே இது.*

நமோ நமோ நாராயணா- ஓம் நமோ நாராயணா (2)

திருப்பதி வாழும் வெங்கடேசனே எங்கள் பெருமானே-
திருமலை வாசா தேவாதி தேவா எங்கள் பெருமானே-
வைகுண்ட வாசா வரம் தரும் நாதா எங்கள் பெருமானே-
வெங்கட ரமணா வானவர் தலைவா எங்கள் பெருமானே
**நமோ நமோ நாராயணா- ஓம் நமோ நாராயணா (2)**

கோவிந்த கிருஷ்ணா கோபால கிருஷ்ணா எங்கள் பெருமானே-
நந்தகுமாரா நவநீதனே எங்கள் பெருமானே-
லக்ஷ்மி பதியே சக்தி கிரிஷா எங்கள் பெருமானே-
கருட வாகனா கலியுக நாதா எங்கள் பெருமானே
**நமோ நமோ நாராயணா- ஓம் நமோ நாராயணா (2)**

நச்சுப் பாம்பில் நர்த்தனம் புரியும் எங்கள் பெருமானே-
நல்லவர்க்கெல்லாம் நலமே அருளும் எங்கள் பெருமானே-
பாண்டவர் துயரம் தீர்த்திட வந்த எங்கள் பெருமானே-
பாரதப்போரில் தர்மத்தை காத்த எங்கள் பெருமானே
**நமோ நமோ நாராயணா- ஓம் நமோ நாராயணா (2)**

வைகுண்டம் இறங்கி பூலோகம் வந்த எங்கள் பெருமானே-
கன்றோடு வந்த கோபால பாலா எங்கள் பெருமானே-
மச்சாவதாரம் கூர்மாவதாரம் எங்கள் பெருமானே-
மூன்றடி மண்ணில் மூவுலகாண்ட எங்கள் பெருமானே
**நமோ நமோ நாராயணா- ஓம் நமோ நாராயணா (2)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பதியில் வாழ்பவனே

*நாராயணன் புகழ் பாடும் இன்னுமோர் பாடல். மயூரபதி அம்மன் கோயிலில் ஐயப்பன் பஜனையில் புதிய நாராயணன் பாடல் ஒன்றைப் பாட வேண்டும் என எண்ணி, பத்து நிமிடங்களில் எழுதி முடித்த பாடல் இது. நான் எழுதிய பாடல் களில் மிகவும் குறுகிய காலத்தில் எழுதிய பாடல் இதுதான்.*

திருப்பதியில் வாழ்பவனே ஸ்ரீ வெங்கடேசா நாராயணா-
திருமலையில் அருள்பவனே ஸ்ரீரங்கநாதா நாராயணா (2)

திரு வனத்தில் உறைபவனே ஸ்ரீ வெங்கடேசா நாராயணா-
திரு வரங்கத்தில் திகழ்பவனே ஸ்ரீரங்கநாதா நாராயணா

**திருப்பதியில் வாழ்பவனே ஸ்ரீ வெங்கடேசா நாராயணா .....**

மாயவனே மாதவனே ஸ்ரீ வெங்கடேசா நாராயணா
தூயவனே துகில் கொடுத்தாய் ஸ்ரீ கிருஷ்ணதேவா நாராயணா

**திருப்பதியில் வாழ்பவனே ஸ்ரீ வெங்கடேசா நாராயணா .....**

குருவாயூர் கோயில் கொண்ட ஸ்ரீ கிருஷ்ணதேவா நாராயணா
மதுராபுரி மாயழகா ஸ்ரீ கிருஷ்ணதேவா நாராயணா

**திருப்பதியில் வாழ்பவனே ஸ்ரீ வெங்கடேசா நாராயணா .....**

கோபாலா கோவிந்தனே ஸ்ரீ கிருஷ்ணதேவா நாராயணா
கேசவனே காத்தவனே ஸ்ரீ கிருஷ்ண தேவா நாராயணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுமன் பாடல்

## ஜெய ஹனுமான் ஜெய ஹனுமான்

அனுமனுக்காக நான் எழுதிய ஒரே ஒரு பாடல் இது. அனுமனுக்கும் பாடல்கள் மிக மிகக் குறைவாகவே உள்ளன. எனவே தான் இந்தப் பாடலை எழுதினேன்.

ஜெய ஹனுமான் ஜெய ஹனுமான்-
மாருதி ராஜா ஜெய ஹனுமான் (2)

ஸ்ரீ ராம பக்தா ஜெய ஹனுமான் (2)
சஞ்சீவி மலையோனே ஜெய ஹனுமான் (2)

**ஜெய ஹனுமான் ஜெய ஹனுமான்-**
**மாருதி ராஜா ஜெய ஹனுமான் (2)**

வடைமாலைப் பிரியா ஜெய ஹனுமான் (2)
வெற்றிலை மாலையில் ஜெய ஹனுமான் (2)

**ஜெய ஹனுமான் ஜெய ஹனுமான்-**
**மாருதி ராஜா ஜெய ஹனுமான் (2)**

ராமனின் தூதனே ஜெய ஹனுமான் (2)
பாண்டவர் தோழனே ஜெய ஹனுமான் (2)

**ஜெய ஹனுமான் ஜெய ஹனுமான்-**
**மாருதி ராஜா ஜெய ஹனுமான் (2)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயப்பன் பாடல்கள்

## அப்பனின் மலையோ கயிலைமலை

*2002 ஆம் ஆண்டு முதல் தடவையாக மயூரபதி அம்மன் ஆலயத்தில் ஐயப்பனுக்கு மாலை அணிந்து, விரதம் இருந்து, பஜனைகளில் கலந்து கொண்டு பாடல்களைப் பாடுவேன். அந்த வருடம் சபரி மலைக்குச் செல்லும் பாக்கியம் கிடைத்தது.*

*அடுத்த வருடம் கார்த்திகை மாதம் மாலை அணிந்து, பஜனைகளில் கலந்து கொண்டு, பாடல்களைப் பாடும் போது தான் நாமும் ஐயப்பனுக்கு பாடல்களை எழுதலாமே என மனதில் ஓர் எண்ணம் உதித்தது. அவ்வெண்ணத்தில் உதித்த முதலாவது பாடல் தான் இது.*

அப்பனின் மலையோ கயிலைமலை-
அம்மையின் மலையோ ஏழுமலை-
அண்ணனின் மலையோ பழனிமலை-
எங்கள் ஐயனின் மலையோ அருள்தரும் சபரிமலை

சபரிமலை ஐயனின் சபரிமலை- சபரிமலை அருள்தரும் சபரிமலை
சபரிமலை ஐயனின் சபரிமலை- சபரிமலை அருள்தரும் சபரிமலை
மார்கழி மாதம் பக்தர்கள் கூட்டம் அலை அலையாக மோதும் மலை
மாசில்லாத மணிகண்ட பாலனும் மஞ்சமாதாவும் வாழும் மலை

**சபரிமலை ஐயனின் சபரிமலை- சபரிமலை அருள்தரும் சபரிமலை**
**சபரிமலை ஐயனின் சபரிமலை- சபரிமலை அருள்தரும் சபரிமலை**

அன்புள்ளம் கொண்ட அரிகரபுத்ரன் ஆத்மஜோதி அழகுமலை
ஆதிமுதல் கொண்டு ஜோதிரூபனாய் ஆனந்தமானவன் ஆளும்மலை

**சபரிமலை ஐயனின் சபரிமலை- சபரிமலை அருள்தரும் சபரிமலை**
**சபரிமலை ஐயனின் சபரிமலை- சபரிமலை அருள்தரும் சபரிமலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பங்கள் யாவும் தீர்த்து வைத்திட இனிதே நாடும் இலகு மலை
ஈசனின் திருமகன் கேட்டதைக் கொடுப்பவன் ஈடில்லாதவன் ஈகை மலை

**சபரிமலை ஐயனின் சபரிமலை- சபரிமலை அருள்தரும் சபரிமலை**
**சபரிமலை ஐயனின் சபரிமலை- சபரிமலை அருள்தரும் சபரிமலை**

உள்ளம் நிறைந்த உலகை ஆள்பவன் உவகை கொண்ட உண்மை மலை - ஊழ்வினை அழித்து ஊறுகள் தவிர்த்து ஊக்கமளிக்கும் ஊற்றுமலை

**சபரிமலை ஐயனின் சபரிமலை- சபரிமலை அருள்தரும் சபரிமலை**
**சபரிமலை ஐயனின் சபரிமலை- சபரிமலை அருள்தரும் சபரிமலை**

எளியோர்க்கு அருள்பவன் எங்கள் குல தெய்வம் என்றும் நிலைத்த எமது மலை- ஏழை பங்காளன் சோலை நடுவினில் ஏகாந்தத்தில் ஏற்ற மலை

**சபரிமலை ஐயனின் சபரிமலை- சபரிமலை அருள்தரும் சபரிமலை**
**சபரிமலை ஐயனின் சபரிமலை- சபரிமலை அருள்தரும் சபரிமலை**

ஐந்து மலையாளும் ஐங்கரன் தம்பி அற்புதத் தெய்வம் ஐயன் மலை
ஐயங்கள் தீர்த்து நெய் முடியோடு அன்பர்கள் காணும் அன்பு மலை

**சபரிமலை ஐயனின் சபரிமலை- சபரிமலை அருள்தரும் சபரிமலை**
**சபரிமலை ஐயனின் சபரிமலை- சபரிமலை அருள்தரும் சபரிமலை**

ஒளிவிளக்கானவன் புலி வாகனத்தில் ஒருமனதாக ஒளிரும் மலை
ஓங்கார பரம்பொருள் ஓதும் மறைபொருள் ஓடி விளையாடும் ஓசை மலை

**சபரிமலை ஐயனின் சபரிமலை- சபரிமலை அருள்தரும் சபரிமலை**
**சபரிமலை ஐயனின் சபரிமலை- சபரிமலை அருள்தரும் சபரிமலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சபரிமலை ஐயனும் நீயே

நான் எழுதிய ஐயப்பன் புகழ் பாடும் இரண்டாவது பாடல் இது. சபரிமலை நடை யாத்திரையின் போது நாம் செல்லும் பெருவழியில் உள்ள இடங்களை குறிப்பிட்டு இந்தப் பாடலை எழுதினேன்.

சபரிமலை ஐயனும் நீயே- சுவாமி சத்தியத்தின் தெய்வம் நீயே (2)
முக்திதரும்..
சபரிமலை ஐயனும் நீயே- சுவாமி சத்தியத்தின் தெய்வம் நீயே
**சுவாமியே சரணம் ஐயா- சுவாமி சரணமே சுவாமி ஐயா (2)**

பேட்டை துள்ளி ஆட்டம் நீயே- சுவாமி வேட்டையாடி வருபவன் நீயே
திந்தக்க திந்தக்க..
பேட்டை துள்ளி ஆட்டம் நீயே- சுவாமி வேட்டையாடி வருபவன் நீயே
**சுவாமியே சரணம் ஐயா- சுவாமி சரணமே சுவாமி ஐயா (2)**

அழுதா மலை ஏற்றம் நீயே- சுவாமி தொழுதிடுவோம் உம்மை நாமே
ஆபத்தான..
அழுதா மலை ஏற்றம் நீயே- சுவாமி தொழுதிடுவோம் உம்மை நாமே
**சுவாமியே சரணம் ஐயா- சுவாமி சரணமே சுவாமி ஐயா (2)**

கரிமலை இறக்கம் நீயே சுவாமி- வரிப்புலி வாகனன் நீயே
கடினமான..
கரிமலை இறக்கம் நீயே சுவாமி- வரிப்புலி வாகனன் நீயே
**சுவாமியே சரணம் ஐயா- சுவாமி சரணமே சுவாமி ஐயா (2)**

பம்பா நதித் தீர்த்தம் நீயே- சுவாமி பாவங்களை ஒழிப்பவன் நீயே
பாவம் தீர்க்கும்..
பம்பா நதித் தீர்த்தம் நீயே- சுவாமி பாவங்களை ஒழிப்பவன் நீயே
**சுவாமியே சரணம் ஐயா- சுவாமி சரணமே சுவாமி ஐயா (2)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னிமூல கணபதி நீயே- சுவாமி எண்ணியதை தருவாய் நீயே
கருணையுள்ள ..
கன்னிமூல கணபதி நீயே- சுவாமி எண்ணியதை தருவாய் நீயே
**சுவாமியே சரணம் ஐயா- சுவாமி சரணமே சுவாமி ஐயா (2)**

பதினெட்டாம் படியும் நீயே- சுவாமி படி தொட்டு வருவோம் நாமே
சத்யமான..
பதினெட்டாம் படியும் நீயே- சுவாமி படி தொட்டு வருவோம் நாமே
**சுவாமியே சரணம் ஐயா- சுவாமி சரணமே சுவாமி ஐயா (2)**

சன்னிதான சாஸ்தா நீயே- சுவாமி புண்ணியங்கள் தருவாய் நீயே
சக்தியுள்ள..
சன்னிதான சாஸ்தா நீயே- சுவாமி புண்ணியங்கள் தருவாய் நீயே
**சுவாமியே சரணம் ஐயா- சுவாமி சரணமே சுவாமி ஐயா (2)**

பொன்னம்பலமேடு நீயே- சுவாமி அன்னதானப் பிரபுவும் நீயே
மகரஜோதி..
பொன்னம்பலமேடு நீயே- சுவாமி அன்னதானப் பிரபுவும் நீயே

**சுவாமியே சரணம் ஐயா- சுவாமி சரணமே சுவாமி ஐயா (2)**
**சபரிமலை ஐயனும் நீயே- சுவாமி சத்தியத்தின் தெய்வம் நீயே (2)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புஷ்பாஞ்சலி மலர்ப் பூ அஞ்சலி

ஒவ்வொரு வருடமும் கார்த்திகை முதலாம் நாள் பக்தர்கள் ஐயப்பனுக்கு மாலை போடுவார்கள்.அன்று முதல் கோயில்களில் பஜனை, பூசைகள் நடக்கும். நான் முதலாவதாக ஐயப்பனுக்கு மாலை போட்ட கொழும்பு மயூரபதி பத்ரகாளியம்மன் கோயில் மண்டபத்திலும் பஜனை நடக்கும். ஒவ்வொரு வருடமும் நேரம் கிடைக்கும் நாட்களில் பஜனையில் கலந்து கொண்டு தெய்வீகப் பாடல்களைப் பாடுவேன்.

சாமிமார்கள் மாலைபோட்ட கார்த்திகை முதலாம் நாள் முதல் ஒரு மண்டலம் விரதம் இருந்து பூர்த்தியான நாளன்று புஷ்பாஞ்சலி பூஜை விஷேடமாக நடக்கும்.அப்படி புஷ்பாஞ்சலி நடந்த ஒரு நாளன்று சாமிமார்கள் பலர் புஷ்பாஞ்சலிக்கு ஒரு புதிய பாடலைப் பாடும்படி என்னிடம் கேட்டுக் கொண்டனர். அவர்களின் ஆசையைப் பூர்த்தி செய்ய வேண்டும் என எண்ணி னேன். ஆரம்ப பூசைகள் தொடங்கின.

அப்போது மண்டபத்தின் முன்பக்கம் சென்று அமர்ந்து இருந்து புஷ்பாஞ்சலி பற்றிய ஒரு பாடலை எழுத ஆரம்பி த்தேன். வழமை போல பாடலை எழுதுவதற்கு முன் மெட்டு ஒன்று மனதில் உருவானது. அந்த மெட்டுக்கு ஏற்ற வகையில் பாடலை வரி வாரியாக கற்பனை செய்து எழுதினேன். சரியாக அரை மணிநேரத்தில் பூசைகள் நிறைவடைந்து பஜனை ஆரம்ப மானது. அதே சமயம் புஷ்பாஞ்சலிக்கு புதிய பாடல் ஒன்றும் ஒருவானது. அன்றே இந்தப் பாடலை பஜனையில் பாடினேன். அப்பாடல் இதோ...

புஷ்பாஞ்சலி ... மலர்ப் பூ அஞ்சலி
புஷ்பாஞ்சலி ... மலர்ப் பூ அஞ்சலி
ஹரிஹர சுதனுக்கு சாமிகள் தூவும்-
அன்புக் காணிக்கை போலே ஆகும்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயன் உள்ளம் என்றும் குளிரும்-
அதனால் அருளை வாரி வழங்கும்- ஐயன்
**புஷ்பாஞ்சலி மலர்ப் பூ அஞ்சலி (2)**

நெய்யபிஷேகம் விரும்பும் எங்கள் ஐயப்பசாமிக்கு-
பொய்யின்றி நாமும் நெய் கொண்டு போகும் மணிகண்ட சாமிக்கு (2)
சந்தன வாசம் குங்குமக் கோலம் கொண்ட நம் சாமிக்கு-
சந்தன வாசம் குங்குமக் கோலம் கொண்ட நம் சாமிக்கு-
குரு சாமிகளும் கன்னி சாமிகளும் ஐயன் அருளைப் பெறவே
தூவிடும்.. **புஷ்பாஞ்சலி மலர்ப் பூ அஞ்சலி (2)**

முத்திரைத் தேங்காய் நித்தமும் காணும் ஐயப்ப சாமிக்கு-
சத்தியமான பதினெட்டு படிகளை ஆளும் சாமிக்கு (2)
முத்துமணி மலர் மாலைப் பிரியன் மணிகண்ட சாமிக்கு
முத்துமணி மலர் மாலைப் பிரியன் மணிகண்ட சாமிக்கு
சொத்து சுகம் பல புத்திர பாக்கியம் தந்திடும் அன்பு சாமிக்கு
தூவிடும்.. **புஷ்பாஞ்சலி மலர்ப் பூ அஞ்சலி (2)**

சபரியில் வாழும் சற்குரு நாதன் ஐயப்ப சாமிக்கு-
சஞ்சலம் தீர்க்கும் சத்திய சீலன் மணிகண்ட சாமிக்கு-
அஞ்சுமலை ஆளும் ஆபத் பாந்தவன் எங்கள் சாமிக்கு-
நெஞ்சம் குளிர நிம்மதி தந்திடும் உண்மை அன்பு சாமிக்கு
தூவிடும்.. **புஷ்பாஞ்சலி மலர்ப் பூ அஞ்சலி (2)**

**ஹரிஹர சுதனுக்கு சாமிகள் தூவும்-**
**அன்புக் காணிக்கை போலே ஆகும்-**
**ஐயன் உள்ளம் என்றும் குளிரும்-**
**அதனால் அருளை வாரி வழங்கும்- ஐயன்**
**புஷ்பாஞ்சலி மலர்ப் பூ அஞ்சலி (2)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாலை போட்டுட்டா திருந்தியாகணும்

ஒவ்வொரு வருடமும் கார்த்திகை மாதம் ஐயப்பனுக்கு மாலை போட்டு, 41 நாட்கள் விரதம் இருந்து, சபரிமலைக்கு செல்லும் பக்தர்கள் பல விதமான காரணங்களுக்காக மாலை போடுகின்றனர். தமது குடும்பப் பிரச்சினைகள் தீர, நோய்கள் குணமடைய, பிள்ளைகளுக்கு நல்ல திருமண பந்தம் அமைய, குழந்தைப் பேறு வேண்டி, நல்ல தொழில் வேண்டி இப்படி பல முக்கிய காரணங்கள் உள்ளன. ஆனால் இவை தவிர வேறு சில விசித்திர காரணங்களும் உள்ளன. முரட்டுத் தனமாக, ஊதாரித் தனமாக, போக்கிரித் தனமாக சுற்றித்திரியும் தன் மகன், பேரன், கணவன், மருமகன், அண்ணன், தம்பி போன்றவர்களை திருத்த அவர்களுக்கு அவர்களின் நெருங்கிய உறவினர்கள் வற்புறுத்தி ஐயப்பனுக்கு மாலை போட்டு விடுவதுண்டு.

குறிப்பிட்ட அவர் மாலை போட்டிருக்கும் அந்த 41 நாட்களும் ஊதாரித் தனத்தைக் கைவிட்டு மிகவும் பயபக்தியாக நடந்து கொள்வார் எனவும், சபரிமலைக்குப் போய்த் திரும்பி வந்தவுடன் மணம் திருந்தி நல்லவராகி விடுவார் எனவும் பெற்றோர் மற்றும் உறவினர்கள் நம்புகின்றனர். ஊதாரித் தனமாகத் திரிந்த பலர் மாலை போட்டவுடன் நம்ப முடியாத வகையில் நல்லவர்களாக நடந்து கொள்கின்றனர். ஆனால் சிலர் அந்த புனிதமான கருப்பு ஆடையை அணிந்து கொண்டு போக்கிரித் தனமாக அவர்கள் முன்பிருந்த நிலையிலேயே இருக்கின்றனர். சபரிமலைக்குச் சென்று திரும்பிய சிலரும் மாலையைக் கலட்டியவுடன் தமது பழைய விளையாட்டுகளை தொடங்கி விடுகின்றனர்.

ஒரு தடவை கார்த்திகை மாதம் ஐயப்பனுக்கு மாலை போட்டிருந்த இப்படியான சில சுவாமிமாரை நான் நேரில் கண்டேன். அந்த சமயத்தில் இவர்களுக்கு உரைக்கும் படி, இவற்றை உணர வைக்க ஒரு பாடலை எழுதிப் பாட வேண்டும் என எண்ணிய போது இந்தப் பாடல் உருவானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை போட்டுட்டா திருந்தி ஆகணும்-
திருந்த வேணும்னா மாலை போடணும் (2)
ஐயன் பேரை காக்க வேணும் சாமி-
அந்த ஐயன் புகழ்பாட வேணும் சாமி (2)
**மாலை போட்டுட்டா திருந்தி ஆகணும்-**
**திருந்த வேணும்னா மாலை போடணும் (2)**

வஞ்சகம் சூது பொறாமை- உனக்கு வேண்டவே வேண்டாமே சாமி
குறைகூறித் திரியாதே சாமி- உன் குறைகண்டு திருத்திக்கொள்ளு சாமி
சபரிமலை சென்று வந்த சாமி- நீ சத்தியத்தை காக்க வேணும் சாமி
கன்னிச்சாமி உன்னை சாமி நம்பி சாமி வாரார் சாமி (2)
காத்திடுவாய் கன்னிச்சாமிய- வழி காட்டிடுவாய் கன்னி சாமிக்கு (2)
**மாலை போட்டுட்டா திருந்தி ஆகணும் .... (2)**

சன்னிதானம் சென்று வந்த சாமி-நீ சமயஒழுக்கம் பேணவேணும் சாமி
அன்புக்கு அடிமையாகு சாமி- நீ அறம் செய்து புகழ் சேரு சாமி
ஆசைகளை அழித்து விடு சாமி- நீ அளவோடு பொருள் சேரு சாமி
பொய் புரட்டு கள்ளம் கபடம் கோபம் குற்றம் மோகம் போகம் (2)
ஒழித்திடுங்க சாமிமார்களே- வெறுத்து ஒதுக்கிடுங்க சாமிமார்களே (2)
**மாலை போட்டுட்டா திருந்தி ஆகணும் .... (2)**

மலைக்குப் திரும்பி வந்த சாமி மார்களே- உங்கள மலை போல நம்பி
இருக்கும் குடும்பம் பாருங்க-
பொறுமையுடன் நடக்கவேண்டும் சாமி மார்களே- உங்களுக்கு
பொறுப்புகளும் நெறைய நெனச்சு பாருங்க-
அலங்கோலம் பண்ண வேணாம் சாமி- நீங்க அடக்கத்துடன்
வாழவேணும் சாமி
மது சூது மாது மயக்கம் கொலை கொள்ளை களவு கள்ளம்
ஒழித்திடுங்க சாமி மார்களே- அடியோடழித்திடுங்க சாமி மார்களே
**மாலை போட்டுட்டா திருந்தி ஆகணும் .... (2)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐயனை அன்போடு தாலாட்டுவோம்

இரண்டு வருடங்களுக்கு முன்பு இலங்கையின் பிரபல இசை அமைப்பாளர் திரு. கணேஷ்ராஜ் அவர்களிடம் இருந்து தொலை பேசி அழைப்பு ஒன்று வந்தது. அந்த வருடம் டிசம்பர் மாதம் ஐயப்பன் விரதத்தின் போது ஐயப்பன் பாடல்கள் அடங்கிய இறுவெட்டு ஒன்றை வெளியிட உள்ளதாகவும், அதற்கு இதுவரை வெளிவராத ஒரு விடயம் பற்றிய பாடல் ஒன்றை ஒலிப்பதிவு செய்ய இருப்பதாகவும் கூறினார். அது குழந்தை ஐயப்பனை தூங்க வைப்பதற்காக ஐயப்பன் மீது அளவு கடந்த பக்தி கொண்ட ஒரு பக்தன் பாடும் தாலாட்டுப் பாடல்.

அப்பாடலுக்கு மென்மையான நீலாம்பரி ராகத்தில் மெட்டு ஒன்றைப் போட்டுள்ளதாகவும்,அம்மெட்டுக்கேற்ற ஒரு ஐயப்பன் தாலாட்டுப் பாடலை எழுதி, அதனைப் பாடித் தருமாறும் அன் போடு கேட்டுக் கொண்டார். அவர் போட்ட அந்த இனிமை யான மெட்டையும் எனக்கு அனுப்பி வைத்தார். மெய்மறந்து அந்த மெட்டைக் கேட்டுக் கொண்டே இப்பாடலை எழுதி னேன். பின்பு இசையமைப்பாளர் அவர்களின் இசைக் கூடத் திற்குச் சென்று அப்பாடலைப் பாடியும் முடித்தேன். அந்த ஐயப்பன் தாலாட்டுப் பாடல் ...

ஆரிராரோ ஆராரோ... ஆரிராரோ ஆராரோ...
ஆரிராரோ ஆராரோ... ஆரிராரோ ஆராரோ...

ஐயனை அன்போடு தாலாட்டுவோம்- தூங்க வைப்போம்
ஆரிரரோ ஆரோ... ஆரிரரோ ஆரோ...(2)
எங்கள் சோர்வுகள் தீரவும் துயரங்கள் ஓடவும் காத்தருளும்-
ஆரிரரோ ஆரோ... ஆரிரரோ ஆரோ...
எங்கள் சோர்வுகள் தீரவும் துயரங்கள் ஓடவும் காத்தருளும்-
இரவும் பகலும் என்னேரமும் காக்கும் ஐயனை...

**ஐயனை அன்போடு தாலாட்டுவோம்- தூங்க வைப்போம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலை ஏறி ஓடிவரும் கன்னி சாமிகளை-
முடி தூக்கி நாடிவரும் கன்னி சாமிகளை (2)
காடுகளைக் கடக்கும் கன்னி சாமிகளை-
காத்தருளும் எங்கள் ஐயன் அப்பனை (2)

**ஐயனை அன்போடு தாலாட்டுவோம்- தூங்க வைப்போம்**

பலகோடி பக்தர்களை காக்கும் ஐயனை-
பலநூறு வேண்டுதலை தீர்க்கும் ஐயனை (2)
பாத பலம் அருளும் ஐயன் ஐயனை-
தேக பலம் கொடுக்கும் ஐயன் அப்பனை (2)

**ஐயனை அன்போடு தாலாட்டுவோம்- தூங்க வைப்போம்**

எத்தனை வேலையப்பா ஐயா ஐயப்பா-
எப்படித் தீர்ப்பாய் அப்பா ஐயா ஐயப்பா (2)
நித்தம் நித்தம் அருளும் ஐயா ஐயப்பா-
அத்தனையும் மறந்து கொஞ்சம் தூங்கப்பா (2)

**ஐயனை அன்போடு தாலாட்டுவோம்- தூங்க வைப்போம்**
**ஆரிரரோ ஆரோ... ஆரிரரோ ஆரோ...**

**எங்கள் சோர்வுகள் தீரவும் துயரங்கள் ஓடவும் காத்தருளும்-**
**ஆரிரரோ ஆரோ... ஆரிரரோ ஆரோ...**
**எங்கள் சோர்வுகள் தீரவும் துயரங்கள் ஓடவும் காத்தருளும்-**
**இரவும் பகலும் என்னேரமும் காக்கும் ஐயனை...**
**ஐயனை அன்போடு தாலாட்டுவோம்- தூங்க வைப்போம்**
**ஐயனை அன்போடு தாலாட்டுவோம்- தூங்க வைப்போம்**

**ஆரிராரோ ஆராரோ... ஆரிராரோ ஆராரோ...**
**ஆரிராரோ ஆராரோ... ஆரிராரோ ஆராரோ...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பம்பை நதிக் கரையினிலே சரணம் ஐயப்பா

ஐயப்பன் அவதாரம் பற்றிய கதையை ஒரு புத்தகத்தில் படித்தேன். அந்தக் கதை என் மனதைக் கவர்ந்தது. அதை ஒரு பாடலாக எழுதினால் என்ன எனத் தோன்றியதன் விளைவாக உருவான பாடலே இது. ஏற்கனவே நான் கேட்ட ஒரு தெம் மாங்குப் பாடலின் மெட்டில் இப்பாடலை எழுதினேன்.

தன தந்தானே தானே.... தன தந்தானே தானே....
தன தந்தானே தானே.... தன தந்தானே தானே....

பம்பை நதிக்கரையினிலே சரணம் ஐயப்பா-
பாலகனின் குரல் கேட்டு சரணம் ஐயப்பா-
பந்தளத்து மகராஜன் சரணம் ஐயப்பா-
பக்குவமாய் கையில் எடுத்தான் சரணம் ஐயப்பா
**சரணம் ஐயப்பா சரணம் ஐயப்பா- சுவாமியே**
**சரணம் ஐயப்பா சரணம் ஐயப்பா- சுவாமியே**
**சரணம் ஐயப்பா சரணம் ஐயப்பா**
**ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ...**
**தன தந்தானே தானே.... தன தந்தானே தானே...**

கழுத்தில் மணியைக் கண்டு சரணம் ஐயப்பா-
மணிகண்டன் என்றழைத்தான் சரணம் ஐயப்பா-
பன்னிரண்டு வயது வரை சரணம் ஐயப்பா-
பாலகன் வளர்ந்து விட்டான் சரணம் ஐயப்பா

**சரணம் ஐயப்பா சரணம் ஐயப்பா- சுவாமியே (3)**
**ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ...**
**தன தந்தானே தானே.... தன தந்தானே தானே...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த வாரிசென்று சரணம் ஐயப்பா-
அரசன் அறிவித்ததும் சரணம் ஐயப்பா-
அரசி கோபம் கொண்டாள் சரணம் ஐயப்பா-
ஆத்திரத்தில் சூழ்ச்சி செய்தாள் சரணம் ஐயப்பா

**சரணம் ஐயப்பா சரணம் ஐயப்பா- சுவாமியே (3)**
**ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ...**
**தன தந்தானே தானே.... தன தந்தானே தானே... (2)**

தீராத வியாதியொன்று சரணம் ஐயப்பா-
ராணிக்கு வந்திருக்கு சரணம் ஐயப்பா-
புலிப்பாலால் குணமடையும் சரணம் ஐயப்பா-
புரோகிதரும் சொல்லிவிட்டார் சரணம் ஐயப்பா

**சரணம் ஐயப்பா சரணம் ஐயப்பா- சுவாமியே (3)**
**ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ...**
**தன தந்தானே தானே.... தன தந்தானே தானே... (2)**

புலிப்பால் கொண்டுவர சரணம் ஐயப்பா-
புறப்பட்டான் மணிகண்டன் சரணம் ஐயப்பா-
பரந்தாமன் அருளினிலே சரணம் ஐயப்பா-
பாலைக் கொண்டு வந்து தந்தான் சரணம் ஐயப்பா

**சரணம் ஐயப்பா சரணம் ஐயப்பா- சுவாமியே (3)**
**ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ...**
**தன தந்தானே தானே.... தன தந்தானே தானே... (2)**

அன்னை நோய் தீர்த்து விட்டான் சரணம் ஐயப்பா-
அரசாட்சி வெறுத்து விட்டான் சரணம் ஐயப்பா-
அம்பு ஒன்றை எய்து விட்டான் சரணம் ஐயப்பா-
அவ்விடத்தில் குடி கொண்டான் சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சரணம் ஐயப்பா சரணம் ஐயப்பா- சுவாமியே (3)**
**ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ...**
**தன தந்தானே தானே.... தன தந்தானே தானே... (2)**

சபரிமலை உச்சியிலே சரணம் ஐயப்பா-
சாஸ்தாவின் சிலையினிலே சரணம் ஐயப்பா-
மணிகண்டன் ஒன்றி விட்டான் சரணம் ஐயப்பா-
ஐயப்பன் ஆகிவிட்டான் சரணம் ஐயப்பா

**சரணம் ஐயப்பா சரணம் ஐயப்பா- சுவாமியே (3)**
**ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ...**
**தன தந்தானே தானே.... தன தந்தானே தானே... (2)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருப்பண்ணசாமி பாடல்கள்

## கன்னங் கருத்தவரு காவலுக்கு வல்லவரு

ஐயப்பன் பஜனையின் போது காவல் தெய்வமான கருப் பண்ண சாமிக்கும் பாடல்கள் பாடுவதுண்டு. ஆனால் பஜனை பாட்டுப் புத்தகத்தில் கருப்பண்ணசாமி பற்றிய இரண்டு பாடல் கள் மட்டுமே இருந்தன. இந்த இரண்டு பாடல்களையே மாறி மாறிப் பாடுவார்கள்.

அதன் பின்பு இரண்டு கருப்பண்ணசாமியின் பாடல்களை தேடிஎடுத்து அவற்றை நானே பாடினேன். ஐயப்பன் பஜனையின் போது நான் அதிகமாக விரும்பிப் பாடுவது கருப்பண்ண சாமியின் பாடல்களையே. இதற்கு ஒரு முக்கிய காரணமும் இருந்தது. எங்கள் குலதெய்வம் கருப்பண்ணசாமியே. எனவே தான் அவரின் பாடல்களை உணர்ந்து, அனுபவித்துப் பாடி வந்தேன்.

கருப்பண்ணசாமி பற்றிய பாடல்கள் அரிதாகவே உள்ளன எனும் குறையைப் போக்க வேண்டும் எனும் எண்ணம் தோன்றி யது. அதனால் கருப்பண்ணசாமியின் புகழ் பாடும் பாடல்களை எழுத ஆரம்பித்தேன். முதலில் பாடலுக்கான மெட்டை அமை த்து விட்டு, பின்பு வரிகளை எழுதினேன். அதன் பின்பு அப் புதியபாடலை பஜனையில் பாடினேன். அப்பாடல் அருமையாக உள்ளதாக குருசாமி உட்பட சக சாமிமார்கள் கூறினர். அந்தப் பாடல் தான் இது. கருப்பண்ணசாமிக்கு நான் எழுதிய முதலா வது பாடல்.

கன்னங் கருத்தவரு- காவலுக்கு வல்லவரு
கன்னிச் சாமிகளைக் காப்பவரு
காத்தே கருப்பே ஓடிவிடு- பேயே பூதமே ஒதுங்கிவிடு
பில்லி சூனியமே விலகிவிடு
கருப்பன் வாராரு- கத்திக்கிட்டே வாராரு- காத்துப்போலே வாராரு....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னங் கருத்தவரு காவலுக்கு வல்லவரு (2)
பொன்னம்பல மேட்டை காத்து காத்து இருப்பவரு (2)
கருத்தவரு கருத்தவரு கருப்பண்ணசாமி-
நம்ம கன்னிச்சாமி காவலரு கருப்பண்ண சாமி (2)

**கன்னங் கருத்தவரு காவலுக்கு வல்லவரு**
**பொன்னம்பல மேட்டை காத்து காத்து இருப்பவரு**

குற்றாலத்து கருத்தவரு கொண்டை போட்ட முகத்தவரு (2)
புளியங்குடி கருத்தவரு புது அறுவா எடுத்தவரு (2)
அழகர் கோயில் கருத்தவரு ஆவாரம்பூ நிறத்தவரு (2)
சபரிமலைக் கருத்தவரு சரிகைப்பட்டு உடுத்தவரு (2)
கருத்தவரு கருத்தவரு கருப்பண்ணசாமி-
எங்க கன்னி சாமி காவலரு கருப்பண்ணசாமி (2)

**கன்னங் கருத்தவரு காவலுக்கு வல்லவரு**
**பொன்னம்பல மேட்டை காத்து காத்து இருப்பவரு**

வெள்ளக் குதிரை மேலேறி வேகமாக வருபவரு (2)
வேட்டை நாயை கூட்டிகிட்டு வேங்கையாக வருபவரு (2)
வெள்ளி அறுவா ஏந்திக்கிட்டு வீரமாக வருபவரு (2)
வீச்சறுவா வீசிக்கிட்டு வீராப்பா வருபவரு (2)
கருத்தவரு கருத்தவரு கருப்பண்ணசாமி-
எங்க கன்னி சாமி காவலரு கருப்பண்ணசாமி (2)

**கன்னங் கருத்தவரு காவலுக்கு வல்லவரு**
**பொன்னம்பல மேட்டை காத்து காத்து இருப்பவரு**
**கருத்தவரு கருத்தவரு கருப்பண்ணசாமி-**
**நம்ம கன்னிச்சாமி காவலரு கருப்பண்ண சாமி (2)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாராரு வாராரு கருப்புசாமி வாராரு

கருப்பண்ணசாமி பற்றி நான் எழுதிய இரண்டாவது பாடல் இது. வழமைபோல முதலில் மெட்டை அமைத்துவிட்டு அதற் கேற்ப பாடலை எழுதினேன். கருப்பண்ணசாமிக்கு ஆக்ரோஷ மான மெட்டிலேயே பாடல்களை அமைப்பதுண்டு. அப்படிப் பட்ட மெட்டு ஒன்றையே இந்தப் பாடலுக்கும் அமைத்தேன். இந்தப் புதிய பாடலும் சாமிமார்கள் மத்தியில் நல்ல வரவேற் பைப் பெற்றது.

வாராரு வாராரு கருப்புசாமி வாராரு
வாளெடுத்து வீசிக்கிட்டே கருப்புசாமி வாராரு
வெண்குதிரை மேலேறி கருப்புசாமி வாராரு
வேட்டுச் சத்தம் போட்டுக்கிட்டு கருப்புசாமி வாராரு

வாரார் வாரார் வாரார் வாரார்-
வாரார் வாரார் வாரார் வாரார் கருப்புசாமி .... (2)

வாராரு வாராரு கருப்புசாமி வாராரு (2)
வாளெடுத்து வீசிக்கிட்டே கருப்புசாமி வாராரு (2)
வெண்குதிரை மேலேறி கருப்புசாமி வாராரு (2)
வேட்டுச் சத்தம் போட்டுக்கிட்டு கருப்புசாமி வாராரு (2)

வாராரே ஏ.. ஏ.. ஏ.. கருப்புசாமி-
அருள் தாராரே ஏ.. ஏ.. ஏ.. கருப்புசாமி (2)
**வாரார் வாரார் வாரார் வாரார்-**
**வாரார் வாரார் வாரார் வாரார் கருப்புசாமி (2)**

காந்தமலைக் கூத்துக்காரன் கருப்புசாமி வாராரு-
காடுமலை மேடுதாண்டி கருப்புசாமி வாராரு-
காங்கேயம் காளைபோல கருப்புசாமி வாராரு-
கன்னிச் சாமி பூஜையிலே கலந்துக்கவே வாராரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாராரே ஏ.. ஏ.. ஏ.. கருப்புசாமி**
**அருள் தாராரே ஏ.. ஏ.. ஏ.. கருப்புசாமி (2)**
**வாரார் வாரார் வாரார் வாரார்-**
**வாரார் வாரார் வாரார் வாரார் கருப்புசாமி (2)**

அப்பாச்சி மேட்டுக்காரன் கருப்புசாமி வாராரு-
அதிரடி வேட்டுக்காரன் கருப்புசாமி வாராரு-
அஞ்சுமலைக் காட்டுக்காரன் கருப்புசாமி வாராரு-
அழுதமலைக் கோட்டைக்காரன் கருப்புசாமி வாராரு

**வாராரே ஏ.. ஏ.. ஏ.. கருப்புசாமி**
**அருள் தாராரே ஏ.. ஏ.. ஏ.. கருப்புசாமி (2)**
**வாரார் வாரார் வாரார் வாரார்-**
**வாரார் வாரார் வாரார் வாரார் கருப்புசாமி (2)**

பதினெட்டுப் படிக்காரன் கருப்புசாமி வாராரு-
பந்தளத்து ராஜனுக்கு பாதுகாப்பா வாராரு-
பட்டையக் காரன் அவன் பாய்ந்தெழுந்து வாராரு-
பக்தர்களைக் காத்திடவே பறந்து பறந்து வாராரு

**வாராரே ஏ.. ஏ.. ஏ.. கருப்புசாமி**
**அருள் தாராரே ஏ.. ஏ.. ஏ.. கருப்புசாமி (2)**
**வாரார் வாரார் வாரார் வாரார்-**
**வாரார் வாரார் வாரார் வாரார் கருப்புசாமி (2)**

அக்கினியில் பிறந்தவரு கருப்புசாமி வாராரு-
அண்டம் கிடுக்கிடுக்க கருப்புசாமி வாராரு-
ஆனந்தப் பாட்டுப்பாடி கருப்புசாமி வாராரு-
ஆவேசமாய் எழுந்து கருப்புசாமி வாராரு-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாராரே ஏ.. ஏ.. ஏ.. கருப்புசாமி**
**அருள் தாராரே ஏ.. ஏ.. ஏ.. கருப்புசாமி (2)**
**வாரார் வாரார் வாரார் வாரார்-**
**வாரார் வாரார் வாரார் வாரார் கருப்புசாமி (2)**

எருமேலி கோபக்காரன் கருப்புசாமி வாராரு-
எமனுக்கு சாபக்காரன் கருப்புசாமி வாராரு-
எலந்த பூவுக்காரன் கருப்புசாமி வாராரு-
ஏழைகளின் காவல்காரன் கருப்புசாமி வாராரு

**வாராரே ஏ.. ஏ.. ஏ.. கருப்புசாமி ........**
**அருள் தாராரே ஏ.. ஏ.. ஏ.. கருப்புசாமி**
**வாராரே ஏ.. ஏ.. ஏ.. கருப்புசாமி ........**
**அருள் தாராரே ஏ.. ஏ.. ஏ.. கருப்புசாமி**

**வாரார் வாரார் வாரார் வாரார்-**
**வாரார் வாரார் வாரார் வாரார் கருப்புசாமி**

**வாரார் வாரார் வாரார் வாரார்-**
**வாரார் வாரார் வாரார் வாரார் கருப்புசாமி**

**வாரார் வாரார் வாரார் வாரார்-**
**வாரார் வாரார் வாரார் வாரார் கருப்புசாமி**

**வாரார் வாரார் வாரார் வாரார்-**
**வாரார் வாரார் வாரார் வாரார் கருப்புசாமி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழகர்மலை காவல்காரன்

*கருப்பண்ணசாமியின் புகழ்பாடும் எனது மூன்றாவது பாடல் இது. வழமைபோல ஒரு மெட்டை அமைத்து விட்டு இந்தப் பாடலை எழுதினேன்.*

அழகர் மலை காவல்காரன் நம்ம கருப்புசாமி-
அவர் நல்ல கருப்புசாமி- சபரிமலை காவல்காரன் நம்ம கருப்பசாமி-
அவர் நல்ல கருப்பசாமி (2)

கருப்பழகா கருப்பழகா கருப்பு சாமியே நம்ம கருப்புசாமியே-
கருப்பழகா கருப்பழகா கருப்பு சாமியே நம்ம கருப்புசாமியே (2)

வெள்ளைக்குதிரை மேல வாரார் நம்ம கருப்புசாமி-
அவர் நல்ல கருப்புசாமி
வெள்ளி அருவா ஏந்தி வாரார் நம்ம கருப்புசாமி-
அவர் நல்ல கருப்புசாமி
**கருப்பழகா கருப்பழகா கருப்பு சாமியே நம்ம கருப்புசாமியே (2)**

தாமரைப்பூ நெஞ்சழகன் நம்ம கருப்புசாமி-
அவர் நல்ல கருப்பசாமி
வாழைத்தண்டு தொடை அழகன் நம்ம கருப்புசாமி-
அவர் நல்ல கருப்புசாமி
**கருப்பழகா கருப்பழகா கருப்பு சாமியே நம்ம கருப்புசாமியே (2)**

பதினெட்டாம் படிக்காரன் நம்ம கருப்புசாமி-
அவர் நல்ல கருப்பசாமி
சாமிமாரின் காவல்காரன் நம்ம கருப்புசாமி-
அவர் நல்ல கருப்புசாமி
**கருப்பழகா கருப்பழகா கருப்பு சாமியே நம்ம கருப்புசாமியே (2)**

அஞ்சாத சிங்கமப்பா நம்ம கருப்பசாமி-அவர் நல்ல கருப்புசாமி
எம் சஞ்சலங்கள் தீர்த்து வைப்பார் நம்ம கருப்புசாமி-
அவர் நல்ல கருப்புசாமி
**கருப்பழகா கருப்பழகா கருப்பு சாமியே நம்ம கருப்புசாமியே (2)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருப்பு கருப்பு கருப்பரு

*கருப்பண்ணசாமியின் புகழ் பாடும் எனது நான்காவது பாடல்.*

கருப்பு கருப்பு கருப்பரு கருப்புசாமி கருப்பரு-
காவல் தெய்வம் கருப்பரு- காக்க வந்த கருப்பரு (2)
காடுமலை மேடுதாண்டி ஓடிவாரார் கருப்பரு-
கஷ்டப்படும் மக்கள் குறை வேண்டி வாரார் கருப்பரு (2)

கன்னங்கரு சாமி எங்க தங்க சாமி கருப்பரு-
கஷ்டப்படும் ஏழைகளைக் காக்க வந்த கருப்பரு (2)
**கருப்பா.. எங்க கருப்பழகா- நம்ம காக்க வந்த கடவுளப்பா.. (2)**

வேட்டுச் சத்தம் போட்டுக்கிட்டு வேங்கையாக வாராரு-
பாட்டுப்பாடி ஆடிக்கிட்டு காத்துப்போல வாராரு (2)
**கருப்பா.. எங்க கருப்பழகா- நம்ம காக்க வந்த கடவுளப்பா.. (2)**

சிங்கநடை போட்டுக்கிட்டு எங்க சாமி வாராரு-
தங்க குணம் கொண்ட வீரசூர சாமி வாராரு (2)
**கருப்பா.. எங்க கருப்பழகா- நம்ம காக்க வந்த கடவுளப்பா.. (2)**

புள்ளிமானைக் காத்திடவே நல்ல சாமி வாராரு-
வெள்ளிப்பிடி புதுஅறுவா வீசிக்கிட்டு வாராரு (2)
**கருப்பா.. எங்க கருப்பழகா- நம்ம காக்க வந்த கடவுளப்பா.. (2)**

ஒத்தப்பனைச் சாலையிலே ஓடி ஓடி வாராரு-
பத்துத் தலைப்பாகை சுத்தி சத்தம் போட்டு வாராரு (2)
**கருப்பா.. எங்க கருப்பழகா- நம்ம காக்க வந்த கடவுளப்பா.. (2)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அண்ட பகிரண்டமும்

*கருப்பண்ணசாமியின் புகழ் பாடும் எனது ஐந்தாவது பாடல்.*

அண்டம் பகிரண்டமும் அஞ்சு நடுங்கவே ஆக்ரோஷம் கொண்ட
கருப்பா..
ஆபத்தில் காப்பவனே ஆறுமுகன் தம்பியின் ஆலயம் காக்கும்
கருப்பா..
எண்திசைக் காவலர் இருந்திடும் போதிலே எதிர் வந்து நிற்கும்
கருப்பா..
எவர்க்கும் அடங்காத கயவர் உடலின் எலும்புகள் முறித்த
கருப்பா..

வருகிறார் வருகிறார் கருப்பண்ணன் வருகிறார்-
வாட்ட சாட்டமாக எங்கள் கருப்பசாமி வருகிறார் (2)
சனீஸ்வரன் தொல்லை நீக்க கருப்பண்ணன் வருகிறார்-
சஞ்சலங்கள் நீக்கிடவே சக்தியோடு வருகிறார்

ஈசனவன் அம்சமான கருப்பண்ணன் வருகிறார்-
பாசமாக அழைத்தாலே குறையெல்லாம் தீர்க்கிறார்-
ஏழுமுனி ரூபம் கொண்டு கருப்பண்ணன் வருகிறார்-
ஏழுலகம் காத்திடவே எதிர்கொண்டு வருகிறார்
**வருகிறார் வருகிறார் கருப்பண்ணன் வருகிறார்....**

சங்கிலியை தோளில் வைத்து கருப்பண்ணன் வருகிறார்-
சாட்டை எடுத்து வீசி வீசி சன்னிதானம் வருகிறார்-
அங்கெங்கும் தெருவைச் சுற்றி கருப்பண்ணன் வருகிறார்-
அய்யனுக்குத் துணையாக ஆடி ஆடி வருகிறார்
**வருகிறார் வருகிறார் கருப்பண்ணன் வருகிறார்....**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயினிலே மந்திரத்தை சொல்லியபடி வருகிறார்-
வாயு வேகமாகி வந்து வரும் வழியில் நிற்கிறார்-
வேட்டை நாயைப் பற்றிக்கொண்டு கருப்பண்ணன் வருகிறார்-
வேங்கையாக சீறிக்கொண்டு வேகமாக வருகிறார்
**வருகிறார் வருகிறார் கருப்பண்ணன் வருகிறார்....**

நோயாலே வாடுவோரை குணமாக்க வருகிறார்-
பேய்களையும் பூதங்களையும் விரட்டியடித்து வருகிறார்-
நெற்றியிலே சாம்பல் பூசி கருப்பண்ணன் வருகிறார்-
முண்ட ஜடாமுடி கொண்டு முன்னாலே வருகிறார்
**வருகிறார் வருகிறார் கருப்பண்ணன் வருகிறார்....**

சுற்றி சுற்றி பார்த்து பார்த்து சுழன்றாடி வருகிறார்-
சுகம் தந்து அருள் புரிய சீக்கிரமாய் வருகிறார்-
காடு மலை மேடுகளில் காவலாக வருகிறார்-
வீடுபேறு இன்பமெல்லாம் வேண்டும் போதே தருகிறார்
**வருகிறார் வருகிறார் கருப்பண்ணன் வருகிறார்....**

**வருகிறார் வருகிறார் கருப்பண்ணன் வருகிறார்-**
**வாட்ட சாட்டமாக எங்கள் கருப்பசாமி வருகிறார் (2)**

**சனீஸ்வரன் தொல்லை நீக்க கருப்பண்ணன் வருகிறார்-**
**சஞ்சலங்கள் நீக்கிடவே சக்தியோடு வருகிறார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தத்துவப் பாடல்

## நம்பிக்கை தானே எங்கள் பலம்

கதிர்காமத்திற்கு பாதயாத்திரை செல்லும் சமயத்தில் பல புதியவர்கள் அறிமுகமானார்கள். அவர்களில் ஒருவர் தான் மூதூர் பகுதியைச் சேர்ந்த ஒரு சகோதரி. தனது குடும்பத்துடன் பாத யாத்திரை வருபவர். பாதயாத்திரையின் போது இரவு நேர பஜனையில் பஜனைப் பாடல்களைப் பாடுவார். இந்த சகோதரி யைப் பார்த்து நான் ஆச்சரியமடைந்தேன். காரணம் அவர் ஒரு மாற்றுத் திறனாளி. யுத்தத்தின் போது தனது ஒரு கால் பாதிப் படைந்த நிலையில் ஊன்று கோலின் துணையுடனேயே அவரால் நடக்க முடியும். எம்மோடு ஐந்து நாட்கள் காட்டுக்குள் நடந்து வந்து கதிர்காமத்தை அடைவார்.

இரண்டு வருடங்களுக்கு முன்பு அவர் ஒரு அன்பு வேண்டு கோளை என்னிடம் வைத்தார். திருகோணமலையில் அவர் உறுப்பினராக அங்கம் வகிக்கும் மாற்றுத் திறனாளிகள் சங்கத்தின் ஆண்டு விழாவின்போது, அவர்கள் பற்றிய ஒரு பாடலைப் பாட வேண்டும் எனவும், அப்படி ஒரு பாடலை மெட்டமைத்து, எழுதித் தரும்படியும் என்னிடம் கேட்டார்.

உண்மையில் அவர்களுக்கு பாடல் மூலம் எதைக் கொடுக்க லாம் என யோசித்தேன். தன்னம்பிக்கை தான் அவர்களின் மூல தனம் என்பது தெரிந்தது. அதையே கொடுக்கலாம் என எண்ணிய போது சுவாமி விவேகானந்தரின் வரிகள் ஞாபகம் வந்தன. "எழுமின் விழிமின் குறிசேரும் வரை நில்லாது செல்மின்"

ஒரு இலக்கை வைத்து தன்னம்பிக்கையோடு எழுந்து அதை அடையும்வரை முன்னேற வேண்டும் எனும் சுவாமி விவேகானந் தரின் வரிகளை அடிப்படையாக வைத்து மெட்டமைத்து ஒரு பாடலை எழுதினேன். அப்பாடல் தான் இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கை தானே எங்கள் பலம்
நட்புடன் வாழ்வோம் நூறு யுகம்
எழுமின் விழிமின் குறி சேரும் வரை
நில்லாது செல்மின்.

**நம்பிக்கை தானே எங்கள் பலம்...**

முயற்சியில்லாமல் உயர்ச்சியில்லை- அதுதான் வெற்றியே
உணர்ச்சியில்லாமல் எழுச்சியில்லை- அதுவே வாழ்க்கையே
அனுதாபம் அது அவமானம்
உற்சாகம் எம் மூலதனம்
கடும் உழைப்பே நம் வருமானம்
இதுதான் நமக்கு தன்மானம்
உழைப்பால் உயர்வோம் இந்நாளில்-இந்த
உலகம் போற்றும் ஒருநாளில்
**உழைப்பால் உயர்வோம் இந்நாளில்-இந்த**
**உலகம் போற்றும் ஒருநாளில்**

**நம்பிக்கை தானே எங்கள் பலம்...**

உடலில் ஊனம் சிறிதளவு- கவலை இல்லையே
மனதினில் துணிவு கடலளவு- வெல்வோம் உலகையே
தினம் தினம் தேடல் அறிவு தரும்
பணமும் பொருளும் வரும் போகும்
தோல்வியைக் கண்டு துவளாதே
வெற்றிக்கு அதுதான் படியாகும்
முடியாது எனும் சொல் ஒன்று
நம் அகராதியிலும் கிடையாது.
**முடியாது எனும் சொல் ஒன்று**
**நம் அகராதியிலும் கிடையாது.**

**நம்பிக்கை தானே எங்கள் பலம்..**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வை இல்லை என்றாலும்- கூர்மை ஆயிரம்
கேட்பது இல்லை என்றாலும்- அவதானம் அதிகம்
பேசிட வார்த்தைகள் தேவையில்லை
வாசிக்க முடியும் பயமுமில்லை
அடுத்தவர் குடியை கெடுத்ததில்லை
மனதினை நோக அடித்ததில்லை
நல்லது நடக்கும் வாழ்வினிலே- என
நம்பிக்கை கொள்வோம் தோழர்களே
**நல்லது நடக்கும் வாழ்வினிலே- என**
**நம்பிக்கை கொள்வோம் தோழர்களே**

**நம்பிக்கை தானே எங்கள் பலம்...**

சோதனைகள் பல தேடிவரும்- அதுதான் வாழ்க்கையே
சாதனை புரிந்ததும் ஓடி விடும்- அதுதான் உண்மையே
கொடுப்பதற்கென்று எதுவும் இல்லை
எங்கள் அன்புக்கு ஏது எல்லை
ஏழை என்றாலும் கோழையில்லை
நாளை நடப்பதில் கவலை இல்லை
உனக்கென இருக்குது தனி உலகம்-அதில்
உழைத்தால் ஜெயிப்பது மிக சுலபம்
**உனக்கென இருக்குது தனி உலகம்-அதில்**
**உழைத்தால் ஜெயிப்பது மிக சுலபம்**

**நம்பிக்கை தானே எங்கள் பலம்**
**நட்புடன் வாழ்வோம் நூறு யுகம்**
**எழுமின் விழிமின் குறி சேரும் வரை**
**நில்லாது செல்மின்.**
**எழுமின் விழிமின் குறி சேரும் வரை**
**நில்லாது செல்மின்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாலாட்டுப் பாடல்

## தங்கப் பொன்னே எங்கள் கண்மணி

தாய் தந்தைக்கு முதலாவது பிள்ளை எவ்வளவு முக்கியமோ அதுபோல தாத்தா பாட்டிக்கும் முதலாவது பேரப்பிள்ளை மிக மிக முக்கியமான ஒரு சொத்தாகத் தெரியும். தாம் வாழ்ந்து முடிந்த கால கட்டத்தில் இன்னும் சில காலம் வாழ வேண்டும் எனும் ஆசையை அவர்களுக்கு உண்டாக்குவது தான் அவர் களின் பேரப்பிள்ளை.

தமது மகனின் அல்லது மகளின் முதல் வாரிசு தான் அவர் களின் குலத்தை, பரம்பரையை முன்னெடுத்துச் செல்லும் மிக முக்கியமான, விலை மதிப்பிட முடியாத ஒரு சொத்து என அவர்கள் நினைப்பார்கள்.

அப்படி ஒரு பேரப்பிள்ளையை ஆவலுடன், எதிர்பார்த்துக் காத்திருக்கும் போது, அப்பிள்ளை பேரனாக இருந்தால் அவன் தான் சிங்கக்குட்டி என பெருமை கொள்வோம். அதுவே பேத்தி யாக இருந்தால் அவள் தான் நமக்குக் கிடைத்த மகாலட்சுமி எனப் போற்றுவோம்.

அப்படிப்பட்ட ஒரு பேத்தி எமது வீட்டிலும் பிறந்தாள். லக்ஸியா என்று பெயர் சூட்டி மகிழ்ந்து, அந்த மகாலட்சுமியை கையில் அள்ளி எடுத்து அணைத்தபோது பெற்ற ஆனந்தத்திற்கு அளவே இல்லை. அந்தக் குட்டி தேவதை மெல்லிய குரலில் அழுதபோது என்னையறியாமல் என் அடி மனதில் இருந்து வந்த "ஆரிரரோ ஆரராரோ" எனும் தாலாட்டுடன் ஒரு மென்மை யான ராகம் உருவானது. அந்த ராகத்தோடு எழுந்த வரிகளில் அமைந்த தாலாட்டுப் பாடல் தான் இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரீராரோ ... ஆராராரோ- ஆராராரோ... ஆரீராரோ ...
ஆரீராரோ ... ஆராராரோ- ஆரிரரோ... ஆராரோ ...

தங்கப் பொன்னே எங்கள் கண்மணி-
சிங்கப் பெண்ணே எங்கள் பொன்மணி (2)
ஆலமரம் போல் விரிந்து ஏழு ஜென்மம் குலம் தழைக்க (2)
வந்த கண்ணே எங்கள் கண்மணி-
சொந்தப் பெண்ணே எங்கள் பொன்மணி

**ஆரீராரோ ... ஆராராரோ- ஆராராரோ... ஆரீராரோ ...**
**ஆரீராரோ ... ஆராராரோ- ஆரிரரோ... ஆராரோ ...**

ஆயிரம் காலத்துப் பயிர் நீயே-
ஆதவன் சந்திரன் ஒளி நீயே (2)
வைரம் பொன் மாணிக்கம் பவளம் முத்தே-
கைகளில் தவளும் அழகு சொத்தே (2)
தெய்வம் தந்த தேனமுதே-
சைவம் தமிழ் வளர் பிறையே

**தங்கப் பொன்னே எங்கள் கண்மணி-**
**சிங்கப் பெண்ணே எங்கள் பொன்மணி (2)**

**ஆரீராரோ ... ஆராராரோ- ஆராராரோ... ஆரீராரோ ...**
**ஆரீராரோ ... ஆராராரோ- ஆரிரரோ... ஆராரோ ...**

இல்லத்தில் உதித்த மகா லட்சுமி-
செல்வமகள் நீ தனலட்சுமி (2)
தாயிடம் அமுதப் பால் பருகி-
பாயினில் தவளும் தேனருவி (2)
அழகுக் கிளி கனிமொழியே-
மழலை மொழி கண்மணியே

**தங்கப் பொன்னே எங்கள் கண்மணி-**
**சிங்கப் பெண்ணே எங்கள் பொன்மணி (2)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆரீராரோ ... ஆராரராரோ- ஆராரராரோ... ஆரீராரோ ...**
**ஆரீராரோ ... ஆராரராரோ- ஆரிரரோ... ஆராரோ ...**

தேடியும் கிடைக்கா செல்வமிது-
தேவதை கொடுத்த வடிவமிது (2)
ஆடிடும் மயிலின் தேகமிது-
பாடிடும் குயிலின் ராகமிது (2)
உன் சிரிப்பு பொன் மதிப்பு
துயர் துடைக்கும் அரு மருந்து

**தங்கப் பொன்னே எங்கள் கண்மணி-**
**சிங்கப் பெண்ணே எங்கள் பொன்மணி**
**ஆலமரம் போல் விரிந்து ஏழு ஜென்மம் குலம் தழைக்க**
**வந்த கண்ணே எங்கள் கண்மணி-**
**சொந்தப் பெண்ணே எங்கள் பொன்மணி**

**ஆரீராரோ ... ஆராரராரோ- ஆராரராரோ... ஆரீராரோ ...**
**ஆரீராரோ ... ஆராரராரோ- ஆரிரரோ... ஆராரோ ...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மன் பாடல்கள்

## வாழும் எங்களுக்கு வழிகாட்டி

**எழுதியவர்: ஏ.கே.கே. பவுல்**

சில வருடங்களுக்கு முன்பு எனது ஒன்று விட்ட அக்காவின் கணவரும், சிறுவயதில் இசைத் துறையில் எனக்கு ஆர்வத்தை ஊட்டியவருமான பவுல் மாமாவின் ஊருக்குச் சென்றிருந்தேன். அப்போது அவர் என்னிடம் தான் எழுதிய இரண்டு பாடல் களைக் கொடுத்தார். அதில் ஒரு பாடல் அவ்வூரில் கோயில் கொண்டிருக்கும் அம்மனைப் பற்றியது. அம்மன் பாடல்களுக்கு உரிய ஒரு மெட்டை அமைத்து அப்பாடலைப் பாடும்படி என்னிடம் கூறினார். ஆனால் அடுத்த மாதமே அவசரமாக அவரைப் பார்க்கச் செல்ல வேண்டி வந்தது. அது அவரைப் பார்க்கச் சென்ற கடைசித் தருணம் என்று அப்போது எனக்குத் தெரியவில்லை. திடீரென சுகவீனமுற்ற மாமா இவ்வுலகை விட்டுப் பிரிந்தார். அவர் எழுதிக் கொடுத்த அம்மன் பாடல் தான் இது.

வாழும் எங்களுக்கு வழிகாட்டி-
நீ வந்து அமர்ந்த இடம் வளத்தாப்பிட்டி
வாழும் எங்களுக்கு வழிகாட்டி-
நீ வந்து அமர்ந்த இடம் வளத்தாப்பிட்டி
கூடி கும்பிட்டோம் கோயில் கட்டி
ஒரு குலதெய்வம் நீதானே ஒளிகாட்டி

**வாழும் எங்களுக்கு வழிகாட்டி....**
**நீ வந்து அமர்ந்த இடம் வளத்தாப்பிட்டி**

காடாக இருந்த இடம் ஊரானது-
எங்க கருமாரி குடியிருக்க உருவானது (2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் காவல் எந்நாளும் நிலையானது
என்றும் உன் வாசல் வருவோர்க்கு நலமானது
**வாழும் எங்களுக்கு வழிகாட்டி....**
**நீ வந்து அமர்ந்த இடம் வளத்தாப்பிட்டி**

வருடத்தில் ஒரு திங்கள் கொண்டாட்டமாம்-
அங்கு வருவோர்கள் பல நூறு பக்தர்களாம் (2)
அலங்காரத் தோரணப்பூ பந்தல்களாம்
எங்க ஆத்தாவின் அபிஷேக ஊர்கோலமாம்
**வாழும் எங்களுக்கு வழிகாட்டி....**
**நீ வந்து அமர்ந்த இடம் வளத்தாப்பிட்டி**

பாலோடு பழச்சாறு அபிஷேகம்-
வண்ணப் பட்டாடை பூச்சூடி திருக்கோலம் (2)
முக்கோடி தேவர்கள் தேவாரம்-
முத்து மாரிக்கு ஊரெங்கும் விழாக்கோலம்

**வாழும் எங்களுக்கு வழிகாட்டி-**
**நீ வந்து அமர்ந்த இடம் வளத்தாப்பிட்டி**
**வாழும் எங்களுக்கு வழிகாட்டி-**
**நீ வந்து அமர்ந்த இடம் வளத்தாப்பிட்டி**
**கூடி கும்பிட்டோம் கோயில் கட்டி**
**ஒரு குலதெய்வம் நீதானே ஒளிகாட்டி**

**வாழும் எங்களுக்கு வழிகாட்டி-**
**நீ வந்து அமர்ந்த இடம் வளத்தாப்பிட்டி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயே தெய்வம் அறிவேனம்மா

### எழுதியவர்: ஏ.கே.கே. பவுல்

மாமா அவர்கள் எழுதிக்கொடுத்த அடுத்த பாடல் தாயைப் பற்றியது. இந்தப் பாடலை ஒரு இந்திப் பாடல் மெட்டுக்கு ஏற்ற வகையில் தான் எழுதியதாகவும், அதே மெட்டில் இப் பாடலைப் பாடும் படியும் என்னிடம் கூறினார். இதோ அந்தப் பாடல்.

தாயே தெய்வம் அறிவேனம்மா-
தாங்கும் இதயம் நீ தானம்மா
அம்மா.. அம்மா உன்னை நானும் மறவேனம்மா
**தாயே தெய்வம் அறிவேனம்மா ....**

பத்து மாதம் சுமந்து என்னைப் பெற்ற தாயம்மா-
பகலும் இரவும் மறந்து என்னை வளர்த்த தாயம்மா
**பத்து மாதம் ..**
தன்னலம் இல்லையே தாயின் அன்பிலே-
தாயைப் போல தெய்வம் இந்த உலகில் இல்லையே
**தாயே தெய்வம் அறிவேனம்மா ....**

கண்ணைக் காக்கும் இமைபோல் நீ என்னைக் காக்கிறாய்-
மண்ணில் நானும் வாழ உன் உயிரைக் கொடுக்கிறாய்
**கண்ணைக் காக்கும்..**
எல்லையே இல்லையே தாயின் சேவையே-
எதையும் தாங்கி சுமக்கும் இந்த தாயின் உள்ளமே

**தாயே தெய்வம் அறிவேனம்மா-**
**தாங்கும் இதயம் நீ தானம்மா**
**அம்மா.. அம்மா உன்னை நானும் மறவேனம்மா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து எழுச்சிப் பாடல்கள்

## உலகின் புதுமை இந்துமதம்

2010 ஆம் ஆண்டு இந்து சேவா சங்கம் எனும் அமைப்பில் இணைந்தேன். ஏனைய அமைப்புக்களை விட இவ்வமைப்பின் கொள்கைகளும், செயற்பாடுகளும் வித்தியாசமாக இருந்தன. இந்து சமயத்திற்கும், சமூகசேவைக்கும் முக்கியத்துவம் கொடுத்து செயல்படும் அவ்வமைப்பில் ஒவ்வொரு மாதமும் ஒன்று கூடல்கள், கருத்தரங்குகள் நடக்கும். அதில் சிந்திக்கத் தூண்டும் இந்து சமய எழுச்சிப் பாடல்களை எல்லோரும் ஒன்று சேர்ந்து பாடுவோம். இப்பாடல்கள் எல்லாம் தமிழகத்தில் உருவாக்கப்பட்ட பாடல்கள்.

இந்த அமைப்பின் மகாநாடு ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை சர்வதேச அளவில் நடைபெறும். தேசிய அளவில் அது போன்ற ஒரு மகாநாடு கண்டி மாவட்டத்தில் உள்ள தெல் தோட்ட என்னுமிடத்தில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டது. எம்மை எல்லாம் வழி நடத்தும் திரு. இராதாகிருஷ்ணன் ஜி அவர்கள் இலங்கையில் முதன் முதலாக நடக்கும் இம்மாநாட்டில் இலங்கையில் உருவாக்கப்பட்ட ஒரு பாடலைப் பாட வேண்டும் என என்னிடம் அன்புடன் கேட்டுக் கொண்டார்.

அவரின் வேண்டுகோளின் படி ஒரு மெட்டை அமைத்து அதற்குப் பாட்டை எழுதினேன். இந்து சமயத்தில் மகிமை, பெருமை, அதன் தோற்றம், இலங்கையில் இந்து சமயம், அதை வளர்த்தவர்கள் போன்ற விடயங்களை உள்ளடக்கி அப்பாடலை எழுதினேன். அப்பாடலை தெல்தோட்டையில் நடைபெற்ற தேசிய மாநாட்டின் இறுதி நிகழ்வில் குழுவினரையும் இணைத்துக் கொண்டு பாடினேன்.

அதன்பின் அப்பாடல் சங்கத்தில் முக்கிய நிகழ்வுகளில் பாடப்பட்டது. 2013 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் கொழும்பில் நடந்த சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது ஜனன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின விழாவை ஒட்டி வெளியிடப்பட்ட இறுவெட்டில் முதலாவது பாடலாக இப்பாடல் பதிவு செய்யப்பட்டது.

அதன்பின் **2015** ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வடஇந்தியாவில் உள்ள இந்தூர் நகரில் நடைபெற்ற சர்வதேச இந்து சமய மாநாட்டின் இறுதி நிகழ்வில் எமது இலங்கைக் குழுவினரை இணைத்துக் கொண்டு இப்பாடலைப் பாடினேன். இப்பாடல் அன்று பல நாடுகளிலும் இருந்து வந்திருந்த பிரமுகர்களின் பாராட்டைப் பெற்றது. இத்தனை சிறப்புகள் மிக்க அப்பாடல் இதோ..

உலகின் புதுமை இந்து மதம்
பழமை பெருமை கொண்ட மதம்
**உலகின் ...**
கண்ணியம் காக்கும் எங்கள் மதம்
பெண்ணின் பெருமை போற்றும் மதம்
**கண்ணியம்...**
**உலகின் புதுமை இந்துமதம்- பழமை பெருமை கொண்ட மதம்**

நாவலர் பெருமான் காத்த மதம்- நான்மறை எல்லாம் போற்றும் மதம்
**நாவலர்...**
விவேகானந்தரும் விபுலானந்தரும்
கட்டிக் காத்திட்ட எங்கள் மதம்
**விவேகானந்தரும்...**
**இந்து வருக இன்றே இணைவோம்-இந்து வருக இன்றே இணைவோம்**

சிந்து சமவெளி கண்ட மதம்- முந்தி முதன் முதல் வந்த மதம்
**சிந்து...**
முன்னொரு காலத்தில் முழு உலகிலுமே
முதன்மை மதமாய் இருந்த மதம்
**முன்னொரு..**
**இந்து வருக இன்றே இணைவோம்-இந்து வருக இன்றே இணைவோம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேதீஸ்வரத்தில் சிவனாக- நயினைபதியில் சக்தியாக

**கேதீஸ்வரத்தில்...**

கதிர்காமத்தில் வேலாக-

திருமூலர் போற்றிய சிவபூமி

**கதிர்காமத்தில்..**

**இந்து வருக இன்றே இணைவோம்-இந்து வருக இன்றே இணைவோம்**

முத்தமிழ் கொண்ட மூல மதம்- சித்தர்கள் போற்றும் சிறந்த மதம்

**முத்தமிழ்....**

யோகர் சுவாமியும் போகர் சித்தரும்-

போற்றிப் பாடிய அன்பு மதம்

**யோகர்...**

**இந்து வருக இன்றே இணைவோம்-இந்து வருக இன்றே இணைவோம்**

சனாதன தர்மம் காத்திடவே- சங்கம் என்றும் உழைத்திடுமே

**சனாதன....**

இந்து இளைஞ்சா ஒன்று படு-

இன்றே வந்து சேர்ந்து விடு

**இந்து...**

**இந்து வருக இன்றே இணைவோம்-இந்து வருக இன்றே இணைவோம்**

இந்து வருக இன்றே இணைவோம்-இந்து வருக இன்றே இணைவோம்

இந்து வருக இன்றே இணைவோம்-இந்து வருக இன்றே இணைவோம்

இன்றே இணைவோம்-இன்றே இணைவோம்

இன்றே இணைவோம்-இன்றே இணைவோம்

இணைவோம்-இணைவோம்-

இணைவோம்-இணைவோம்-

இணைவோம்

**உலகின் புதுமை இந்து மதம்-பழமை பெருமை கொண்ட மதம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கத்தின் தோழர்களே

இந்து சேவா சங்கத்தின் ஏழு நாள் பயிற்சி முகாம்கள் வருடத்திற்கு மூன்று தடவைகள் இலங்கையின் பல பாகங்களிலும் நடைபெறும். அவ்வாறு நடைபெறும் பயிற்சி முகாம்களில் சொற் பொழிவாளராக கலந்து கொள்வேன்.

இலங்கையின் பல ஊர்களிலும் இருந்து வந்து பயிற்சியில் கலந்து கொள்ளும் இளைஞர்கள் அனைவரும் ஏழு நாட்களில் இணைபிரியாத நண்பர்களாகி விடுவார்கள். கடைசி ஏழாவது நாளில் மனமில்லாமல் பிரிந்து செல்லும் காட்சியை பல பயிற்சி முகாம்களில் கண்டுள்ளேன்.

அப்படிப்பட்ட பயிற்சி முகாம் ஒன்று கொழும்பு ரத்மலானை இந்துக்கல்லூரியில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்ட போது இந்த உணர்ச்சி பூர்வமான சூழ்நிலையை பாடலாக வடிக்க வேண்டும் எனும் எண்ணம் தோன்றியது. அப்போது உருவான பாடல் தான் இது. பயிற்சி முகாமின் இறுதி நாள் இரவு இந்தப்பாடலைப் பாடினேன். இளைஞர்களின் மனதில் இப்பாடல் நிலைபெற்றது. அப்பாடல் இதோ..

சங்கத்தின் தோழர்களே- இந்துமத காவலரே-
அன்பு ஒன்றே நிலையானதே (2)
இந்துக் குடும்பம் இதுவே- சங்கக் குடும்பம் இதுவே-
அன்பு ஒன்றே நிலையானதே- அன்பு ஒன்றே நிலையானதே

**சங்கத்தின் தோழர்களே- இந்து மத காவலரே-**
**அன்பு ஒன்றே நிலையானதே- அன்பு ஒன்றே நிலையானதே**

சேவை செய்வதே லட்சியம்- சேர்ந்து செய்வதே உத்தமம்-
ஒற்றுமையின் உயிர்ச் சங்கமம் (2)
ஏற்றத்தாழ்வு இல்லையே- ஏழை செல்வன் இல்லையே (2)
அன்பு ஒன்றே நிலையானதே- அன்பு ஒன்றே நிலையானதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சங்கத்தின் தோழர்களே- இந்து மத காவலரே-**
**அன்பு ஒன்றே நிலையானதே- அன்பு ஒன்றே நிலையானதே**

அன்று சங்கம் தமிழ் வளர்க்க- இன்று சங்கம் நட்பு வளர்க்க
என்னாளும் துணை நின்றதே(2)
ஒரே தாயின் பிள்ளைகள்- நட்புக்கில்லை எல்லைகள் (2)
அன்பு ஒன்றே நிலையானதே- அன்பு ஒன்றே நிலையானதே

**சங்கத்தின் தோழர்களே- இந்து மத காவலரே-**
**அன்பு ஒன்றே நிலையானதே- அன்பு ஒன்றே நிலையானதே**

பண்பு பயிற்சி முகாமில்- இந்து சமயப் பணியில்-
ஒன்று சேரும் நாள் அல்லவா (2)
சேர்ந்த போது ஆனந்தம்- பிரிந்த போது சோகமே (2)
அன்பு ஒன்றே நிலையானதே- அன்பு ஒன்றே நிலையானதே-

**சங்கத்தின் தோழர்களே- இந்து மத காவலரே-**
**அன்பு ஒன்றே நிலையானதே- அன்பு ஒன்றே நிலையானதே**

இன்று பிரிகிறோம் தோழனே- மீண்டும் சந்திப்போம் நண்பனே-
இந்துப் பணி காத்திருக்குதே (2)
கண்ணில் நீரும் பெருகுதே- நெஞ்சமெல்லாம் உருகுதே (2)
அன்பு ஒன்றே நிலையானதே- அன்பு ஒன்றே நிலையானதே

**சங்கத்தின் தோழர்களே- இந்து மத காவலரே-**
**அன்பு ஒன்றே நிலையானதே- அன்பு ஒன்றே நிலையானதே**
**இந்துக் குடும்பம் இதுவே- சங்கக் குடும்பம் இதுவே-**
**அன்பு ஒன்றே நிலையானதே- அன்பு ஒன்றே நிலையானதே**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்று பட்ட எங்கள் சக்தியே

உலகிலேயே உன்னதமான சமயம் இந்து சமயம் தான் என்பதை பல ஆய்வுகள் உறுதிப்படுத்தி உள்ளன. அப்படிப்பட்ட இச்சமயத்தை அண்மைக் காலமாக நாத்திகவாதிகளும், வேறு சமயத்தைச் சேர்ந்த சில குழுவினரும் கொச்சைப் படுத்தி பேசி வருவதை சமூக ஊடகங்களில் பார்க்கக் கூடியதாக உள்ளது. அதே சமயம் குறிப்பிட்ட சில அமைப்புக்களைச் சேர்ந்த இந்து உறுப்பினர்களால் இவ்விஷமக் கருத்துக்களுக்கு தக்க பதிலடியும் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் இந்துக்களில் முக்கால் வாசிப் பேர் தமது சமயத்தை இழிவுபடுத்தும் இந்த நடவடிக்கைகளைப் பார்த்தும் பாராமல் நடுநிலையாக இருக்கின்றனர்.

இப்படிப்பட்ட கருத்துக்களின் உச்சக் கட்டமாக தமிழ் நாட்டில் உள்ள ஒரு நாத்திகவாதி அம்மன் சிலையின் நெஞ்சில் தனது காலை வைத்துக் கொண்டு நிற்கும் ஒரு புகைப்படத்தை சில வருடங்களுக்கு முன்பு முகநூலில் பார்த்தேன். இது மனது க்கு மிகவும் வேதனையைக் கொடுத்தது.

தமது மதத்தை இழிவு படுத்துவதை கண்டு கொள்ளாமல், பார்த்தும் பாராமல் இருக்கும் நடுநிலை இந்துக்கள் இப்படி இருப்பதால் தான் நாத்திகவாதிகள் தைரியமாக இந்து சமயத்தை இழிவு படுத்துகிறார்கள் என்பதும் ஏற்றுக் கொள்ளக் கூடியதே. இந்த நடுநிலை இந்துக்களுக்கு அந்த அம்மன் தான் தட்டிக் கேட்கும் தைரியத்தைக் கொடுக்க வேண்டும் எனும் ஆதங்கத் தோடு ஒரு பாடலை எழுதினேன். அப்பாடல் தான் இது.

ஒன்று பட்ட எங்கள் சக்தியே
எங்கள் சக்தி தெய்வ பக்தியே
எதிர்க்கும் துஷ்டனை அழிக்கும் வல்லமை
எமக்குத் தந்திடு பராசக்தியே
**ஒன்று பட்ட எங்கள் சக்தியே....**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இமயம் முதல் இலங்கை வரை இந்து சக்தியே
உலகம் எங்கும் பரவும் அந்த தெய்வ பக்தியே
லா..லலல்ல...லா.. லா...லலல்ல..லா
**இமயம் முதல்......**
போரிடு அநீதி ஒழித்திடு- வேரொடு துவேசம் அழித்திடு
பொய்மை தோற்க வேண்டும் அதற்குத் தேவை நல்ல யுக்தியே
உண்மை ஜெயிக்கும் போது கிடைக்கும் அந்தப் பெரிய வெற்றியே

**எதிர்க்கும் துஷ்டனை அழிக்கும் வல்லமை**
**எமக்குத் தந்திடு பராசக்தியே**
**ஒன்று பட்ட எங்கள் சக்தியே....**

தூண் முதல் துரும்பு வரை உந்தன் சக்தியே
வாழும் குடும்பம் மனைவி மக்கள் எங்கள் சக்தியே
லா..லலல்ல...லா...லா...லலல்ல..லா
**தூண் முதல்......**
நம்பிக்கை நமக்கு ஆயுதம்- ஒற்றுமை எமது தேசியம்
என்றென்றும் அச்சமில்லை அச்சமில்லை எமது நெஞ்சிலே
எப்போதும் வீரனாக நேர்மையாக வாழ்வோம் மண்ணிலே

**எதிர்க்கும் துஷ்டனை அழிக்கும் வல்லமை**
**எமக்குத் தந்திடு பராசக்தியே**
**ஒன்று பட்ட எங்கள் சக்தியே....**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வா நண்பா நண்பா வந்திணைந்திடு

இந்து சேவா சங்கத்தின் ஏழு நாள் பயிற்சி முகாம் ஒன்றில் புதிய பாடல் எழுதும் போட்டி நடைபெற்றது. இப்போட்டியின் நடுவராக என்னை அமர்த்தினார்கள். அப்போது நானும் ஒரு புதிய பாடலை எழுத வேண்டும் என எண்ணினேன்.

இந்து இளைஞர்கள், இன்றைய கால கட்டத்தில் இந்து சமயம் எதிர்நோக்கும் சவால்களை துணிவோடு எதிர் கொண்டு, அதைக் காக்க வேண்டும் எனும் கருத்தை மையமாக வைத்து அப்புதிய பாடலை எழுத வேண்டும் என எண்ணினேன். அப் போது எழுதிய பாடல் தான் இது.

வா நண்பா நண்பா வந்திணைந்திடு-
தா உந்தன் கரம் தந்துதவிடு-
போ இன்றே நெஞ்சில் ஓர் துணிவொடு-
வீரனே நீ வா (2)
இந்து தர்மம் காக்க வேண்டும்-
இந்த உலகை ஆள வேண்டும் (2)
நாமெல்லாம் இன்று ஒன்று சேருவோம்
நாளெல்லாம் பணி செய்து வாழுவோம்
**வா நண்பா நண்பா வந்திணைந்திடு...**

இந்து தர்மம் நல்ல தர்மம்-
என்றும் எம்மை ஆளும் செல்வம்-
அந்த தர்மம் அழிந்திடாமல் இன்று போரிடுவோம்
**இந்து தர்மம்...**
முயற்சி அது உண்டு உன்னிடம்- பயிற்சி எங்கே?
உணர்ச்சி அது உண்டு நம்மிடம்- எழுச்சி எங்கே?
லட்சியம் எந்தன் நெஞ்சிலே-
வெற்றியும் உந்தன் கையிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**லட்சியம்...**

சமுதாயம் வாழ போராடுவோம்-
சம ஜாதி பேதம் நீங்கி வாழுவோம்
**வா நண்பா நண்பா வந்திணைந்திடு...**

உன் பலம் உனக்கு தெரியவில்லை-
நம் நிலை உனக்கு புரியவில்லை
சத்திய புத்திரன் வெற்றியின் நாயகன் நீதான் வல்லவனே
**உன் பலம்...**
கடமை ஒன்று காத்திருக்கு- உடனே ஓடிவா
காலம் இன்று கனிந்திருக்கு- வழியைத் தேடிவா
பாதையில் முட்கள் ஆயிரம்-
துணிவுடன் ஆக்கு பூஜ்ஜியம்
**பாதையில்..**
தடை தாண்டி ஓடி வா தோழனே
விடை காண வேண்டும் வா நண்பனே

**வா நண்பா நண்பா வந்திணைந்திடு-**
**தா உந்தன் கரம் தந்துதவிடு-**
**போ இன்றே நெஞ்சில் ஓர் துணிவொடு-**
**வீரனே நீ வா**

**இந்து தர்மம் காக்க வேண்டும்-**
**இந்த உலகை ஆள வேண்டும்**
**நாமெல்லாம் இன்று ஒன்று சேருவோம்**
**நாளெல்லாம் பணி செய்து வாழுவோம்**
**வா நண்பா நண்பா வந்திணைந்திடு...**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கம் தானே எங்கள் மூச்சு

இந்து சேவா சங்கம் எனும் அமைப்பு ஏனைய அமைப்பு களை விட மிகவும் வித்தியாசமான அமைப்பாக செயல்படுவதை நேரில் கண்டுள்ளேன். பல அமைப்புக்களால் மாதம் ஒரு முறை கூட ஒன்றுகூடி தமது செயல்பாடுகளை நடைமுறைப்படுத்த முடிவதில்லை. ஆனால் இந்த அமைப்பு மாவட்ட ரீதியாக நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் வாரம் ஒருமுறை ஒன்றுகூடி தமது செயற்பாடுகளை செய்து கொண்டிருக்கிறது.

இந்து சமயம் மற்றும் அதன் சிறப்பு பற்றி இளைஞர்கள் அறிந்து கொள்ளும் வகையில் கலந்துரையாடல்கள், கருத்தரங்கு கள், சொற்பொழிவுகள் ஆகியவற்றை நடத்துதல், சமூக சேவை கள் புரியும் வகையில் இளைய சமூக ஆளணியை பயிற்சிகள் மூலம் உருவாக்குதல் இப்படி எந்த அமைப்புகளும் செய்யாத செயற் பாடுகளை இவ்வமைப்பு செய்து வருகிறது.

எனவே இது பற்றிய ஒரு பாடலை எழுத வேண்டும் என நினைத்து இப்பாடலை எழுதினேன்

சங்கம் தானே எங்கள் மூச்சு
சத்தியம் தானே எங்கள் பேச்சு
சூரியன் போல் ஒளி கொடுத்து
வீரியமாய் சேவை செய்யும்.

**சங்கம் தானே எங்கள்...**
**சத்தியம் தானே எங்கள் பேச்சு ...**

கோடித் தோழர்கள் சேவை செய்யும்
தேடி ஓடி வந்து வேலை செய்யும்
ஏழைகள் உலவும் சோலை இது
மாலை பொன்னாடைக்கு வேலை எது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்மையுடன் நேர்மையுடன்
வாழ வழி காட்டும் குரு.

**சங்கம் தானே எங்கள்...**
**சத்தியம் தானே எங்கள் பேச்சு ...**

ஆதரவில்லா குழந்தைகளை
அள்ளி அணைத்திடும் தாய் இவளே
அன்புக்கு ஏங்கும் முதியவரை
அரவணைக்கும் சொந்த மகன் இவனே
சேவை ஒன்றே அனைவருக்கும்
தேவை என்று பாடுபடும் ...

**சங்கம் தானே எங்கள்...**
**சத்தியம் தானே எங்கள் பேச்சு ...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து எழுந்திடு இன்றே எழுந்திடு

இந்து இளைஞர்கள் அர்ப்பணிப்போடு, துணிவோடு தமது சமூகத்திற்கு சேவை செய்ய வேண்டும் எனும் தொனிப் பொருளில் நான் எழுதிய பாடல் இது.

இந்து எழுந்திடு இன்றே எழுந்திடு- நன்றே செய்திடு துணிவோடு..
இந்து எழுந்திடு இன்றே எழுந்திடு- நன்றே செய்திடு துணிவோடு..
**இந்து எழுந்திடு இன்றே எழுந்திடு- நன்றே செய்திடு துணிவோடு..**

சைவம் வைணவம் கௌமாரம்- சௌரம் சாக்தம் காணபத்யம்-
எல்லாம் இன்று ஒன்றாகி- இந்து தர்மம் என்றாகும் (2)
**இந்து எழுந்திடு இன்றே எழுந்திடு- நன்றே செய்திடு துணிவோடு..**

அன்னியர் ஆட்சி அதிகாரம்- அதனால் வந்த மதமாற்றம்-
இன்றும் தொடர விடமாட்டோம்-என்றே உறுதி கொண்டிடுவோம் (2)
**இந்து எழுந்திடு இன்றே எழுந்திடு- நன்றே செய்திடு துணிவோடு..**

சூது கேடு ஏமாற்று- சூழ்ச்சி பணபலம் வஞ்சனைகள்-
எல்லாவற்றையும் எதிர்கொண்டு- வாராய் வீர நடைபோட்டு (2)
**இந்து எழுந்திடு இன்றே எழுந்திடு- நன்றே செய்திடு துணிவோடு..**

காலம் ஒருநாள் பதில் சொல்லும்- எனக்
காத்துக் கிடப்பதில் பயனில்லை- வீழும் மாந்தர் நாமல்ல-
வெட்டிப் பேச்சும் நமக்கல்ல (2)
**இந்து எழுந்திடு இன்றே எழுந்திடு- நன்றே செய்திடு துணிவோடு...**

சோரம் போகும் இனமல்ல- வீரம் பேசும் இனமன்றோ-
கூறும் தர்மம் போற்றிடுவோம்-சீறும் பாம்பாய் கிளம்பிடுவோம் (2)

**இந்து எழுந்திடு இன்றே எழுந்திடு- நன்றே செய்திடு துணிவோடு...**
**இந்து எழுந்திடு இன்றே எழுந்திடு- நன்றே செய்திடு துணிவோடு...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாருங்க ஷாக்காவுக்கு வாருங்க

இந்து சேவா சங்கத்தின் உறுப்பினர்கள் வாரம் ஒருமுறை ஒன்று கூடி கலந்துரையாடும் கூட்டத்திற்கு "ஷாக்கா" என்று பெயர். இந்த வாராந்த கூட்டத்தில் தான் பல செயற் திட்டங்கள் கலந்துரையாடப்படும். எனவே இது மிகவும் முக்கிய ஒரு கூட்டமாகும். உறுப்பினர்கள் அனைவரும் இதன் முக்கியத் துவம் கருதி இக்கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என் பதையும், ஒரு இந்து மகனின் தார்மீக கடமை என்ன என்ப தையும் பாடல் மூலம் சொல்ல வேண்டும் என எண்ணிய தருண த்தில் இந்தப் பாடல் உருவானது.

வாருங்க ஷாக்காவுக்கு வாருங்க- சேருங்க ஒன்னு கூடுங்க (2)
வாரம் ஒரு முறை- ஒரு மணி நேரம்-
நேரம் ஒதுக்கணும்- கூடிக் கதைக்கணும்
**வாருங்க ஷாக்காவுக்கு வாருங்க- சேருங்க ஒன்னு கூடுங்க**

வேலை இருக்குது வெட்டி இருக்குது-
பொழப்ப பார்க்கணும்- பணத்தை சேர்க்கணும்
இது எல்லாத்துக்கும் மேலாக கடமை இருக்குது-
அது என்னான்னு தான் புரிய வைக்க ஷாக்கா இருக்குது
இதுதான் வாழ்க்கையா- இப்படித்தான் வாழனுமா (2)

இந்த உலகத்திலே மனுஷனாக பிறந்ததினால-
நம்ம மக்களுக்கு சேவை ஏதும் பண்ண வேணுங்க (2)
என்னத்த பண்ணுறது- அதை எப்படி பண்ணுறது
அதுக்கு...
**வாருங்க ஷாக்காவுக்கு வாருங்க- சேருங்க ஒன்னு கூடுங்க**

நம்ம மக்களுக்கு நெறைய தேவை இருக்கு-
நம்ம மதத்தில நெறைய வேலை இருக்கு
உடல் உழைப்பைத்தான தேவைக்கேற்ப கொடுக்கப் பழகனும்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது முடியலைன்னா பணத்தைக் கூட வாரி எறைக்கணும்
இதுதான் பண்புங்க- இந்து தர்மமுங்க (2)
இதைத் தான் செய்யணும்- மனசு வைக்கணும் (2)
அதுக்கு....
**வாருங்க ஷாக்காவுக்கு வாருங்க- சேருங்க ஒன்னு கூடுங்க**

படிப்புக்கு உதவனும் கல்வியக் கொடுக்கணும்-
ஏழைய பார்க்கணும் ஏழ்மையைப் போக்கணும்
இது எல்லாத்துக்கும் நல்ல மனசு இருக்க வேணுங்க-
அது எப்போதுமே நம்மகிட்ட இருக்கு தானுங்க
அப்புறம் எதுக்குங்க- ரொம்ப நேரம் யோசிக்கணும் (2)

நம்ம வரவுக்காக இந்த சமூகம் காத்துக் இருக்குது-
நம்ம சேவைய நம்பி பார்த்த கண்ணும் பூத்து இருக்குது
களத்துல ஏறங்குவோம்- கச்சிதமா முடிச்சுடுவோம் (2)
அதுக்கு .....
**வாருங்க ஷாக்காவுக்கு வாருங்க- சேருங்க ஒன்னு கூடுங்க**

இந்து தோழனே நல்லா கேளப்பா-
இதுதான் தருணமே நீதான் ஆளப்பா
நம்ம மக்களை எல்லாம் முட்டாளாக்கி மதத்தை மாத்துறான்-
மதம் மாறினவன் தெய்வங்களை பழித்துப் பேசுறான்
பொறுத்தது போதுங்க- பொங்கி எழணுங்க (2)

நாம கோயிலத்தான் திருத்தி புதுசா கட்டுறோமுங்க-
அதை கும்பிடத்தான் நம்ம மக்கள் இருக்க வேணுங்க
தடுக்க வேணுங்க- தாய் மதம் திருப்ப வேணுங்க (2)
அதுக்கு ....
**வாருங்க ஷாக்காவுக்கு வாருங்க- சேருங்க ஒன்னு கூடுங்க**


**(என் எண்ணத்தில் உதித்த கானங்கள் பகுதி 1 முற்றும்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபூமி
## என் உள்ளத்தில் உதித்த கானங்கள் பகுதி- I



நூலாசிரியர் என்.கே.எஸ்.திருச்செல்வம் எழுதி, மெட்டமைத்த 35 பாடல்களைக் கொண்ட இந்நூலில் இலங்கையின் பஞ்ச ஈஸ்வரங்கள் பற்றிய பாடல்களும், சிவன், முருகன், விஷ்ணு, அம்மன், அனுமன், ஐயப்பன், கருப்பண்ண சுவாமி ஆகிய தெய்வங்கள் பற்றிய பாடல்களும், இந்து எழுச்சி, தத்துவம், தாலாட்டு ஆகியவை பற்றிய பாடல்களும் இடம் பெற்றுள்ளன. மிகச்சிறப்பாக இலங்கையில் உள்ள 172 லிங்கங்களைக் குறிக்கும் "ஈழத்து லிங்காஷ்டகம்" எனும் பாடலும் இந்நூலில் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நூலாசிரியர் தமிழ்மாமணி திருச்செல்வம் அவர்கள் கிழக் கிலங்கை அம்பாறையில் பிறந்தாலும் சுமார் 35 வருடங்களாக தலைநகர் கொழும்பை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர். இவர் இந்தியாவில் தமிழ்நாடு இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி கோட்டையூர் வெள்ளையத் தேவரின் கொள்ளுப் பேரனும், நல்லமுத்து தேவரின் பேரனுமாவார். இவரது பெற்றோரான கல்யாண சுந்தரம், இராமக்காள் தமிழ் நாட்டையும், இலங்கையில் திருகோணமலையையும் சேர்ந்தவர்கள் என்பதுடன், இவர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத் துறையில் கலைமாணிப் பட்டம் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆடை உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றில் பொது முகாமையாளராகப் பணியாற்றும் ஆய்வாளர் திருச்செல்வம் வரலாற்றுத் துறையிலும், தமிழ்த் திரைப்படத் துறையிலும் கொண்ட ஈடுபாட்டால் 200க்கும் அதிகமான வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் பங்கேற்று பலராலும் பாராட்டப் பெற்றவர். இவர் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினராக இருப்பதுடன் இலங்கையில் உள்ள சில சமூக, சமய அமைப்புகளிலும் பொறுப்பான பதவிகளை வகித்து வருகின்றார்.

தமிழ் சைவசமயம் தமிழ்க்கலைகள் தொடர்பான ஆழமான அறிவுத் தேடலும், அவற்றைத் தெளிவாக விளக்கும் ஆற்றலும் இருப்பதால் திருச்செல்வம் இலங்கையின் பல பாகங்களில் மட்டுமன்றி இந்தியா, மலேசியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் இடம்பெற்ற மாநாடுகள், கலந்துரையாடல்களிலும் கருத்துகளைப் பகிர்ந்து கொள்ள விருப்புடன் அழைக்கப்பட்ட நம் நாட்டுப் பிரதிநிதியும் ஆவார். தமிழ்மாமணி விருது, நுழைபுலம் ஆய்வு விருது, தமிழியல் விருது, இலங்கை இலக்கிய பேரவை விருது, வரலாற்று ஆய்வு கேசரி விருது, வித்தகர் விருது ஆகிய விருதுகளைப் பெற்ற திருச்செல்வம் தொடர்ந்து தேடல் மற்றும் வரலாற்று ஆய்வுகள் மூலமான முடிவுகளைப் பதிவுகளாக்கி, அவற்றால் பயனுறு பணிகள் பல ஆற்றிட அவரைப் பாராட்டி வாழ்த்தி மகிழ்கின்றேன்.

சுவாமி குணாதீதானந்த சரஸ்வதி

சின்மயா மிஷன்
இலங்கை

ISBN 978-955-3726-10-0

விலை ரூபா 500.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org